REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 5 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 92 இல. 56 | Tuesday 05, March, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# மின் கட்டணங்களில் திருத்தம்

## மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்கட்டணம் 33 வீதமாக குறையும்

### ரூபாவின் பெறுமதி அதிகரிப்புப் பயன் மக்களுக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின் கட்டணத்தை 21.9 வீதத்தால் குறைப்பதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இக்கட்டணம் தொடர்பில் மின்சார சபை சமர்ப்பித்த யோசனை மற்றும் செலவுகள் தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, பொது பயன்பாட்டு ஆணைக்குழு மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில், மின்சார சபை சட்டம் மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் நியதிகளுக்கு இணங்க ஆய்வு மற்றும் மீளாய்வுகளை மேற்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக, பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, 30 அலகுகளுக்கு குறைவான மின்சாரத்தை உபயோகிக்கும் பாவனையாளர்களுக்காக தற்போது அலகு ஒன்றுக்கு அறவிடப்படும் 12 ரூபா இதன்பின்னர் 08 ரூபாவாக குறைக்கப்படுவதுடன், இது 33.3 வீத குறைப்பாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 31 - 60 அலகுகளுக்கு இடைப்பட்ட மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணத்தை 28 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 61-90 அலகுகளுக்கு இடைப்பட்ட மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணம் 30 வீதத்தால் குறைவடைவதாகவும் அத்துடன் 91-180 அலகுகளுக்கு இடைப்பட்ட மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணம் 24 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

180 அலகுகளுக்கு அதிக மின் அலகுகளை உபயோகிக்கும் பாவனையாளர்களுக்கு 18 வீதத்தால் கட்டண குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மத வழிபாட்டுத் தலங்களுக்கு 33 வீத மின் கட்டண குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஹோட்டல்கள் மற்றும் கைத்தொழில் பிரிவுகளுக்கு 18 வீத மின்கட்டண குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது நடவடிக்கைகள் பிரிவுக்கான மின் கட்டணம் 23 வீதத்தால் 06

# ஸ்ரீலங்கன் விமான சேவையை முதலீட்டாளர்களுக்கு வழங்க முடிவு

### டெண்டர் கோரல் இன்று இடம்பெறும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஸ்ரீலங்கன் விமான சேவையை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக இன்று (05) கேள்விக் கோரல் இடம்பெறும் என்றும் துறைமுக, கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா தெரிவித்துள்ளார். முதலீட்டாளர்களுக்கு இன்றைய தினம் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை காலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கேள்விப் பத்திரம் கோரப்பட்டு மதிப்பீடு செய்வதற்காக தொழில்நுட்ப குழுவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இதன் அறிக்கை கிடைத்ததன் பின்னர் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



# கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு மத்தியவங்கி அதிகாரிகள் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தமை தொடர்பில் விளக்கம் கோருவதற்காக, மத்திய வங்கியின் அதிகாரிகள் இன்று மு.ப 10.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைக்கப்படவுள்ளனர்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில், இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். 5, 6, 7ஆம் திகதிகளில் பாராளுமன்றம் கூடவுள்ளதால், அத்தினங்களுக்கான 06

# வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற போதை வர்த்தகர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



துபாய்க்கு தப்பிச் செல்ல முயன்ற போதைப்பொருள் குற்றவாளி, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.விமான நிலைய பொலிஸார் இவரைக் கைது செய்தனர். வெலிகம தெனிபிட்டிய பிரதேசத்தில் கடந்த டிசம்பர் (31) பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், முச்சக்கர வண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

அச்சமயம் முச்சக்கரவண்டியை செலுத்திய நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். 06

# சம்பள அதிகரிப்பு விவகாரம்

## மத்திய வங்கி அதிகாரிகளுக்கு அமைச்சரவையில் விசாரணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மத்திய வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பளங்களை முறையான அறிவிப்புக்களின்றி அதிகரிக்க நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது. இது தொடர்பில் விசாரிக்க மத்திய வங்கியின் உயரதிகாரிகள் நேற்று அமைச்சரவைக்கு அழைக்கப்பட்டனர்.

மத்திய வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அண்மையில் தமது சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது, சமூகத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 06

# கூகுளை உபயோகித்து அலரி மாளிகைக்குள் நுழைவு; நீதிமன்றில் ஆஜராக்க நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கூகுள் வரைபடத்தை உபயோகித்து அலரி மாளிகை மதில் மீதேறி உட்பிரவேசித்த இருவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொறியியலாளர் ஒருவருடன் மற்றும் ஒருவரும் இவ்வாறு கைதாகினர். கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள இரவு விடுதியில் 06

# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கையர் எட்டுப்பேர் விடுதலை

மியான்மார் பயங்கரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மியன்மாரில் மியாவடி பகுதியில் சைபர் கிரைம் வலயத்தில் பயங்கரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

மேற்படி இப்பகுதியில் 56 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக ஏற்கனவே 06



கொழும்பு தாமரை தடாகத்தில் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச கீதா மஹோற்சவத்தில், அமைச்சர் விதுரவிக்ரமநாயக்கவுக்கு ஹரியான குருக்ஷேத்ரா மேம்பாட்டு வாரிய செயலாளர் விகாஸ் குப்தா குருக்ஷேத்ரா திருவுருவச்சிலை வழங்கி கௌரவிக்கிறார்.

# தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாக்க புதிய சட்டம் அமுலாகும்

### மகா நாயக்க தேரர்கள், சங்க சபைகளிடம் முன்மொழிவு கோரல்



நாட்டின் தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்களை கண்டறிந்து பாதுகாப்பதற்கு தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்:

தொல்பொருட் பாரம்பரியங்களை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்க வேண்டும்.இவற்றை முறையாக முன்னெடுப்பதற்காக "பிக்கு கதிகாவத்" சட்டமூலத்தை தயாரிக்க எதிர்பார்க்கிறோம்.

கடினமான சூழ்நிலையில் பராமரிக்கப்படும் புனிதத் தலங்களை பாதுகாப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான நிதியை வழங்குவதில், எமது அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

2024 மார்ச் 15க்கு முன்னர் புனிதத் தலங்களுக்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவதே அமைச்சின் 06

# நபர் ஒருவரை அடித்துக்கொன்ற சம்பவம் பொலிஸார் இருவருக்கு மரண தண்டனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (04) மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டிலே, இவர்களுக்கு இத்தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்விரு பொலிஸாரையும் குற்றவாளிகளாகத் தீர்ப்பிடப்பட்ட நீதிமன்றம் அவர்களுக்கு நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

மேற்படி வழக்கு தொடர்பில் நீண்ட விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இதையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இவர்களுக்கு மரண தண்டனை தீர்ப்பளித்தார்.

# 20 கோடி ரூபா பெறுமதியான 09 கிலோ தங்கத்தை கடத்த முயன்ற ஊழியர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இருபது கோடி ரூபா பெறுமதியான ஒன்பது கிலோ தங்க நகைகளை கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக வெளியில் கொண்டு செல்ல முயன்ற விமான நிலைய ஊழியர் ஒருவரை, சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.



இந்நபர் நீண்டகாலமாக மேலும் சில விமான நிலைய ஊழியர்களுடன் சேர்ந்து இத்தகையை நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்படி இவ்வூழியர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 06

# திட்டமிட்ட படுகொலைகளை இனங்காண வேலைத்திட்டங்கள்

### பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிகரித்து வரும் நிலையில் படுகொலை சம்பவங்களைத் தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மனிதப் படுகொலைகளை தடுக்கும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக இந்த மாதத்தில் தீவிர கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 06



# வாகன விபத்தில் பிரான்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தம்புள்ளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில், பிரான்ஸைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன் உட்பட பயணம் செய்த ஒருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தம்புள்ளை ஹபரண பிரதான வீதியில் பெல்வெஹெர பகுதியில் நேற்று இவ்விபத்து இடம் பெற்றது. 06

# வீதி அனுமதிப்பத்திரத்துக்கு இலஞ்சம் பெற்ற இருவருக்கு விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பஸ் வண்டிக்கான வீதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக 35 ஆயிரம் ரூபாவை லஞ்சமாக பெற்றதாக கூறப்படும் இருவரையும் எதிர்வரும் (15) விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபை போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தின் மாவட்ட முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகிய இருவருக்குமே கொழும்பு 06

# மின்சாரம், எரிபொருளை அத்தியாவசியமாக்கி வர்த்தமானி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சாரம் மற்றும் எரிபொருள் துறை சார்ந்த சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி வெளியிட்டுள்ளார். 06




# முட்டை விலையை குறைக்காவிடின் 40 மில்லியன் முட்டைகள் இறக்குமதி

### வர்த்தகர்களுக்கு அரசாங்கம் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய உற்பத்தியாளர்கள் எதிர்வரும் பண்டிகைக்காலத்தில் முட்டை விலைகளை



அதிகரிக்க முற்பட்டால், 40 மில்லியன் முட்டைகளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் திட்டமிடவுள்ளதாக 06

# இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் 'மகே கதாவ' நூல் இன்று வெளியீடு

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் சுயசரிதை நூலான மகே கதாவ (எனது கதை) நூல் வெளியீட்டு விழா இன்று 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஆனந்தாக் கல்லூரி குலரத்ன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றும் இன்றும் தனது வாழ்க்கை 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு இது பொருத்தமான காலமல்ல

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரொருவரை களமிறக்க வேண்டுமானால் அவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட பெரும் திறமையுடையவராக இருப்பது அவசியமென ஆளும்கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலின் போது, பலவீனமான வேட்பாளரொருவரை நிறுத்துமானால் தமது கட்சி அங்கத்துவம் தொடர்பில் தாம் தீர்மானமொன்றை மேற்கொள்ள நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையொன்றின் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தம்புள்ள ஹபரண வீதியில் விபத்து; நால்வர் படுகாயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



தம்புள்ள ஹபரண பிரதான வீதியின் பொல்வெஹர பகுதியில் நேற்று (04) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் காரில் பயணித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் ஆண் குழந்தை ஒன்றும் பஸ்ஸில் பயணித்த ஒருவரும் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் தம்புள்ளையில் இருந்து சீகிரிய நோக்கி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற காரும் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகமாக சென்று கொண்டிருந்த பஸ் மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்ல எத்தனித்த போது எதிரே வந்த கார் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விபத்தினால் பஸ், கார் மற்றும் சிறிய வியாபார நிலையம் ஒன்றிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.



தமிழக அமைச்சர் பி. கே. சேகர் பாபுவை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

## அ./நாச்சியாதீவு மு. வித்தியாலயத்தில் முப்பெரும் விழா முக்கியஸ்தர்கள் பங்கேற்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் வலய கல்வி நிர்வாகப் பிரிவின் கீழ் உள்ள அ/ நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2023 ம் கல்வியாண்டின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் கலை விழா, விருதுகள் வழங்குதல் நிகழ்வுகள் பாடசாலை அதிபர் ஆர். எப். எஸ். ரசூல் தலைமையில் அண்மையில் பாடசாலை வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றன.

இப்பரிசளிப்பு விழாவின் போது பல்வேறு துறைகளில் ஆற்றல் பெற்ற, சாதனைகள் படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த, மாணவர்கள் பலர் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் இங்கு பாடசாலை மாணவர்களின் கலையாற்றலை வெளிப்படுத்தும் கலைத்துறையுடன் சேர்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டு பெற்றோர் பார்வையாளர்களின் பாராட்டுதல்களையும் பெற்றன.





இந்நிகழ்வில் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷேக் எம். ஏ.ஏ.நூருல்லா (நளீமி), அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் விசேட அதிதிகளாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். சந்திரசேன, முன்னாள் வட மத்திய மாகாண சபை முதலமைச்சர் ரஞ்சித் சமரக்கோன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## முஸ்லிம் மீடியா போரத்தின் மகளிர் தின சிறப்பு நிகழ்வு

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்திருக்கும் இவ்வருடத்திற்கான (2024) மகளிர் தின சிறப்பு நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு 7, ஹொட்டன் பிளேஸில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் கலந்து சிறப்பிப்பதோடு, வளவாளர்களாக கலாநிதி நிலுபர் மொகத்தமி ஈரான் இமாம் சாதிக் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்ட நிபுணர் மற்றும் பெண்கள் குடும்ப மனித உரிமைகள் மற்றும் குடியுரிமை சிந்தனை குழுவின் துணைத் தலைவி, பேராசிரியர் பரீனா ருஸைக் தலைவர், புவியியல் துறை கொழும்பு பல்கலைக்கழகம், மற்றும் திருமதி ஷமில துசாரி நிர்வாக பணிப்பாளர்ஆ கியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## தேசிய மட்டத்தில் நேகம மாணவி சுக்ரியா முதலிடம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



அகில இலங்கை பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சியில் அநுராதபுரம் மாவட்டம் கெகிராவ கல்வி வலயத்தைச் சேர்ந்த நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 07 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.எஸ்.எப். சுக்ரியா தேசிய மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப்பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் இவ்வருடம் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கணித அறிவு விருத்தி வினா விடைப் போட்டி நிகழ்ச்சியிலும் வடமத்திய மாகாண மட்டத்தில் தமிழ், சிங்கள மொழிப்பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவர் நேகமயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஜே. அபுல் ஹஸனின் பேத்தியும், எச்.எச். சுஹத் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

## கனமூலை மு. வித்தியாலயத்தில் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் தெற்கு கோட்டத்துக் குட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னியின் வேண்டுகோளுக்கிணங்க ஹுதா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எச். சிஹார் ஆசிரியரின் அயராத முயற்சியினால் அவுஸ்திரேலியா நாட்டில் வசித்துவருகின்ற சகோதர இனத்தைச் சேர்ந்த ஹேமந்தவின் சொந்த நிதியிலிருந்து ரீட்மா பவுண்டேஷன் ஊடாக சுமார் பத்து இலட்சம் பெறுமதியில் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் 310 பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஹுதா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சிஹார் ஆசிரியர் கலந்து சிறப்பித்தார்.




பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் உட்பட உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இதேவேளை இதனை பெற்றுத் தந்த ஹுதா நிறுவனத்தின் பணிப்பாளருக்கும், இதனை வழங்கிய ஹேமந்த அவர்களுக்கும் பாடசாலையின் அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் முந்தல், புளிச்சாக்குளத்தை சேர்ந்த நிஜாமுதீன் முஹம்மத் ஹபீல் புத்தளம் மாவட்ட சமாதான நீதவானாக வெள்ளிக்கிழமை (01) புத்தளம் மாவட்ட நீதவான் எஸ்.ஏ.எம்.சி. சத்துருசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், மஹரகம கபூரிய்யா அரபுக் கல்லூரியில் மௌலவி அல் ஆலிம் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

மேலும், 2012 முதல் புதுக்குடியிருப்பு அஸ்ஸபா பௌவுன்டேஷன் அமைப்பின் பொருளாளராக பணியாற்றி வருவதுடன், ஆன்மீக, சமூக, பணிகளிலும், பல சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

## இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பிலான ஆய்வரங்கு



**அஷ்ரப் ஏ சமத்**

எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம் இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பிலான ஆய்வரங்கமொன்றை (Annual Symposium) கடந்த (02) மாலை 3.00 மணிக்கு கொழும்பு தபால் திணைக்கள தலைமையக கேட்போர் கூடத்தில் நடத்தியது.

நிலையத்தின் ஆளுநர்சபைத் தலைவர் பொறியியலாளர் ஜெளபர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கில் நோக்க உரையை வரலாற்றுத் துறைப்பேராசிரியரும் புரூணை தாருஸ்ஸலாம் பல்கலைக்கழக ஓய்வு நிலைப்பேராசிரியருமான எஸ்.ஏ ஹுசைன்மியா நிகழ்த்தினார்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம் ஏ .நுஹ்மான், பேராதனைப் பல்கலக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், களனிப்பல்கலைக்கழக தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிறுவன சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, கொழும்பு பல்கலைக்கழக பொதுக்கொள்கை மற்றும் அரசியல் விஞ்ஞானத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ், எழுத்தாளர்கள், பன்னூலாசிரியர்கள் என பல புத்திஜீவிகளும் கலந்து கொண்ட இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சாஹிர் மௌலானா, ஏ.எச்.எம் பௌஸி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம். சுஹைர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ரூ. 5000 அபராதம் செலுத்த இயலாமல்

## மூன்று மாதம் சிறைத்தண்டனை அனுபவித்த சிறைக்கைதி விடுதலை

### களுத்துறை சிறைச்சாலையில் சம்பவம்



களுத்துறை சிறைச்சாலை சிறைக்கைதிகள் நலன்புரி அமைப்பின் அனுசரணையுடன், ரூபா 5000.00 தண்டப் பணம் செலுத்த முடியாமல் மூன்று மாத காலங்கள் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த எம். எச். வஸந்த என்ற சிறைக்கைதியின் தண்டப் பணத்தை நலன்புரி அமைப்பினர் செலுத்தி அவரை விடுதலை (01) செய்தனர்.

இந்நிகழ்வில் களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர் திரு ரோஹன கலப்பத்தி, பிரதி பிரதான சிறைக் காப்பாளர் திரு காமினி சில்வா, சிறைச்சாலை கண்காணிப்புக் குழு அங்கத்தவர் நஸ்ரின் நஸீர் மற்றும் சீர்திருத்த உத்தியோகத்தர் கயான் லக்ஷித ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

பல்வேறு சவால்களை எதிர்கொண்டாலும்

# விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க அரசு முன்னுரிமை வழங்கும்

நாட்டின் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் விரைவில்

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் பல சவால்களைக் கடக்க வேண்டியுள்ள போதிலும், விவசாய சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

பயிர்கள் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட, போட்டித் தன்மைமிக்க விவசாயக் கைத்தொழில் துறையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரளவின் அழைப்பையேற்று (02) தம்பலகாமம் பிரதேசச் செயலாளர் பிரிவின் கலமெடியாவ கிராமத்தின் நெல் அறுவடை நடவடிக்கையை கண்காணிப்பதற்கான கள விஜயத்தின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் 9,000 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பெரும்போகத்தின் போது கலமெட்டியாவ கிராம சேவகர் பிரிவில், மாத்திரம் 672 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வருகையுடன் கட்சி, நிற பேதமின்றி அங்கு கூடியிருந்த பிரதேச மக்கள் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறினர். அந்த பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்குமாறு உரிய அதிகாரிகளை ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இப்பிரதேச விவசாயிகள் தமது விளைச்சலுக்கு போதிய நீர் கிடைப்பதில்லை என்றும், அதனைப் பெறுவதற்கான கால்வாய் ஒன்று இல்லாமல்



இருப்பதையும் விவசாய நிலங்களைப் பாதுகாக்க யானை வேலியை அமைத்துத் தருமாறும் ஜனாதிபதியிடம் கோரினர்.

06

# தவக்கால சிந்தனை



## இரக்கத்தின் முகவர்களாக திகழ்வோம்

"ஏழு முறையல்ல ஏழு முறை எழுபது முறை மன்னிப்பது" என்பது கடவுளின் எல்லையில்லா அன்பின் கணிதமாகும். இதனூடாக இயேசு கற்பிப்பது யாதெனில், கடவுளின் மன்னிப்பிற்கு வரையறை கிடையாது, அதில் எண்களால் வரையறை அளக்கப்படுவது கிடையாது,

மாறாக, கடவுளின் அணைகடந்த அன்பினால் அளக்கப்படுவதாகும். இயேசு பகிர்கின்ற உவமையானது இரக்கத்தினை பண்பினை விளக்குகிறது.

பணியாள் ஒருவன் தனது எஜமானிடம் சுமக்க முடியாத கடனைப் பெற்றுள்ளான். ஆயினும் அவன் தன் எஜமானிடம் இரக்கத்திற்காக வேண்டியபோது, எஜமான் அளவுகடந்த இரக்கத்தினைக் காண்பித்து, அவனது முழுக் கடனையும் மன்னித்து விடுகிறான். மன்னிப்பினைப் பெற்ற பணியாள், தன்னிடம் குறைவான அளவு கடன் பெற்ற உடன் பணியாளனைக் கண்டபோது, அவனது கடனை மன்னித்து இரக்கம் காட்டத் தவறுகிறான்.

இதனைக் கேள்வியுற்ற எஜமான் அதிருப்தியுற்று, அவனுக்கு காண்பித்த இரக்கத்தை நீக்கிவிட்டு, பரஸ்பர மன்னிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றான்.

இவ்வுவமையானது நமது வாழ்விற்கான கண்ணாடியாக செயற்படுகிறது. நாமே மன்னிப்புப் பெற்ற பணியாளர்கள். நாம் பாவத்தின் சுமைகளால் தள்ளாடியபோதும், கடவுள் தமது அளவுகடந்த இரக்கத்தினால் நம்மை அரவணைத்துக் கொண்டு, அதே இரக்கத்தினையும்,மன்னிப்பையும் அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ள நம்மைக் கேட்கிறார்.

கடவுளின் அளவு கடந்த இரக்கத்தினை கடைப்பிடிப்பதன் வாயிலாக, கடவுளின் தெய்வீக மீட்பு நாடகத்தின் பங்கேற்பாளர்களாக மாறுகிறோம். மன்னிப்பின் பயணம் இலகுவானது கிடையாது, ஆயினும் இது என்றும் நம்மோடு இருக்கின்ற கடவுளால் அருளப்பட்டது.

உருமாற்றுகின்ற கடவுளின் அளவுகடந்த மீட்பிற்கு நமது உள்ளங்கள் திறந்திருக்கட்டும், நாம், நமது பக்கத்தில் ஆற்றுப்படுத்தலுக்கும், குணமாக்கலுக்கும், மன்னிப்புக்கும் ஏங்கித் தவிக்கும் உலகிற்கு கடவுளின் இரக்கத்தின் முகவர்களாக திகழ்வோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# வைத்தியசாலையில் வீதி விபத்து விழிப்புணர்வு நிகழ்வு



*(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)*

*அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சுகாதார மேம்பாட்டு பிரிவு ஏற்பாடு செய்த " வீதி விபத்து விழிப்புணர்வு நிகழ்வு" (03) வைத்தியசாலை கிறோவுன் கார்டன் வளாகத்தில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப் தலைமையில் நடைபெற்றது.*

*நாளாந்தம் மூன்று முதல் ஐந்து வரையிலானவர்கள் விபத்துக்களால் காயமுற்று வைத்தியசாலைக்கு வருவதால்,விபத்துக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.*

# சட்டக் கல்லூரி 150ஆவது ஆண்டு விசேட நினைவு முத்திரை வெளியீடு

*இலங்கை சட்டக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கொழும்பு புதுக்கடை சட்டக் கல்லூரி கேட்போர் கூடத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் விசேட நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் தபாலுறை வெளியிடப்பட்டது. 50 ரூபா பெறுமதியான நினைவு முத்திரையும் முதல் நாள் தபாலுறையும் ருவான் இந்திரஜித் உபசேனவினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய, சட்ட மாஅதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம், ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட, சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி அதுல பத்திநாயக்க மற்றும் நீதிபதிகள், சட்ட பீட மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.*




# மர்மமான முறையில் உயிரிழந்த டொக்டரின் சடலம் வீட்டிலிருந்து மீட்பு

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் டொக்டர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கராப்பிட்டிய வைத்திய சாலையில் எக்ஸ்ரே பிரிவில் பணியாற்றிய டொக்டர் ஒருவரே இவ்வாறு மர்மமாக உயிரிழந்துள்ளார். இவரது சடலம் அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காலி, தலகஹஹேன பதுமங்க பகுதியைச் சேர்ந்த பிரபாத் சாமர சம்பத் என்ற 37 வயதுடைய, டொக்டரே உயிரிழந்தவராவார். டொக்டரான இவரது மனைவியும் கராப்பிட்டிய வைத்தியசாலையில் பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

மனைவி வீட்டில் இல்லாத நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த டொக்டரின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலை சட்ட வைத்திய பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை

## கேள்வி அழைப்பு

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கடவத்த நகர மத்தியில் அமைந்துள்ள காணித் துண்டை 5 வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் மற்றும் வர்த்தக அபிவிருத்தித் திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இடம் | : கடவத்த அதிவேக பஸ் நிலையத்தின் முன்னால் |
| பரப்பளவு | : ஏக் 0 - ரூட் 18.2 - பேர்ச் 18.2 (58.2 பேர்ச்) |
| அடிப்படை மாதாந்த வாடகை | : ரூபா 552,000.00 |
| விலைக்கோரல் பிணை முறி | : ரூபா 500,000.00 |
| செயற்றிட்டக் காலம் | : 05 வருடங்கள் |
| உத்தேச அபிவிருத்தி | : உணவுபான விற்பனை நிலையம் / சுப்பர் மார்கட் அல்லது அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு வர்த்தகப் பாவனை (அரைவாசி நிரந்தர கட்டமைப்புடனான கட்டிடம்) |

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் : 2024-03-15 மு.ப. 10.30 மணிக்கு

இதில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இயைபுடைய விபரங்கள் அடங்கிய கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா மற்றும் இதற்குரித்தான வரிகள் சகிதம் செலுத்தி பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 1ஆம் கட்டம், 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து 2024-03-06ஆம் திகதி முதல் 2024-03-19ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த விலைமனுக்களை 2024-03-26ஆம் திகதி வரை சமர்ப்பிக்கலாம் என்பதுடன் கிடைக்கப்பெற்றுள்ள கேள்விப் படிவங்கள் பத்தரமுல்ல செத்சிறிபாய கட்டம் 1, 7ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் அவ்வேளையிலேயே திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு, 8ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, "செத்சிறிபாய'', பத்தரமுல்ல தொலைபேசி : 011-2875921, 011-2875916-20 நீடிப்பு 2960-2967, தொலைநகல் : 011-2875900, மின்னஞ்சல் முகவரி : directorred@uda.gov.lk, இணையதளம்: www.uda.gov.lk என்பவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், வருமானக் கேள்விக் குழு (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்ல.**



## கலாசார அலுவல்கள் திணைக்களம்

**8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.**

**எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டம்**

**2023 / 2024 இன் கீழ் நூல்களைக் கொள்வனவு செய்தல்**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2022/2023ம் ஆண்டுகளின் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுக்குரியதாக எழுதப்பட்டுள்ள நூல்களைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

1. **குறித்த விடயங்கள்**
   நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், சமயம், நாட்டார்கலை, இசை, நடனம், நாடகம், சினிமா விடயத்திற்குரிய நூல்கள், புகைப்படம், சித்திரக்கலை, வெகுசன ஊடகம் / வெகுசனத் நூல்கள், ஆராய்ச்சி மற்றும் தொடர்பாடல் / விமர்சன நூல்கள், கலை கலாசாரங்களுக்குரிய தொடர்புடைய நூல்கள், பல்வேறு விடயங்களுக்குரிய நூல்கள், செய்யுள் இலக்கியம், வரலாறு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள் என்பனவாகும்.
2. நூல் மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவொன்று 2022 மற்றும் 2023 ஆகிய இரு வருடங்களுக்குரியதாக நியமிக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றது.
3. விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்திய இரு வருடங்களின் ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூலாசிரியரின் வெளியீடுகளும், பதிப்பகமொன்றினூடாக அச்சிட்டு "நூலாசிரியரின் பங்காக" எழுத்தாளருக்கு வழங்கப்படுவது குறித்த நூலின் பிரதிகளும் மாத்திரமே கொள்வனவு செய்யப்படும் (மேற்குறிப்பிட்ட விடயங்கள், நூலாசிரியரால் சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுகின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.)
4. எழுத்தாளர் ஊக்குவிப்பின் பொருட்டு எழுத்தாளரொருவருக்கு 2022 மற்றும் 2023 ஆகிய இரு வருடங்களுக்குமுரியதாக (ஒரு வருடத்திற்கு 01 நூல் வீதம்) 02 நூல்களை சமர்ப்பிக்க முடியும்.
5. பத்திரிகை அறிவித்தல் ஊடாகவும், மாவட்டச் செயலக / பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாகவும், அதேபோன்று www.culturaldept.gov.lk எனும் இணையதளத்தின் ஊடாகவும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்ண. என்பதுடன், 2024 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

**யசிந்தா குணவர்த்தன**
**கலாசார அலுவல்கள் பணிப்பாளர்**





தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22



**குறள் தரும் சிந்தனை**

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது**

குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.

# நெற்செய்கையை கட்டியெழுப்புவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

தெற்காசியப் பிராந்தியத்தில் நெற்செய்கைக்குப் பிரசித்தி பெற்ற நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். நெற்செய்கைக்கு அவசியமான சீதோஷண நிலை உள்ளிட்ட இயற்கை வளங்களை இந்நாடு தாராளமாகவே பெற்றுக் கொண்டுள்ளது. அதன் பயனாக ஆரம்பகாலம் முதல் நெற்செய்கைக்கு பிரசித்தி பெற்ற நாடாக விளங்குகிறது இலங்கை. இந்நிலையில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாகக் கருதப்பட்ட இந்நாடு, ஒரு காலத்தில் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்துள்ளது.

நெற்செய்கைக்குத் தேவையான வளங்களை இயற்கையாகவே பெற்றுக் கொண்டுள்ளதன் பயனாக இந்நாடு தனித்துவமான நீர்ப்பாசன கலாசாரத்தை உலகுக்கு வழங்கியுள்ளது. அதாவது இந்நாட்டின் ஒவ்வொரு நெற்செய்கைப் பிரதேசமும் குளத்தையும் அதனை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன கால்வாய்க் கட்டமைப்பையும் சமய வழிபாட்டுத் தளத்தையும் வயல்வெளியையும் கொண்டதாக இருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறான நீர்ப்பாசன மற்றும் மதவழிபாட்டு கட்டமைப்பை வேறு நாடுகளில் மிக அரிதாகவே அவதானிக்க முடிகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நெற்செய்கை தொடர்பில் இவ்வாறு தனித்துவம்மிக்க சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ள போதிலும் இந்நாடு வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்த சந்தர்ப்பங்களும் உள்ளன. குறிப்பாக சுதந்திரத்திற்குப் பின்வந்த காலப்பகுதியில் பல சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டு பாவனையாளருக்கு விநியோகிக்கும் நிலைமை ஏற்பட்டது.

அதிலும் கடந்த ஆட்சிக் காலத்தில் நெற்செய்கைக்கு இயற்கைப் பசளை அறிமுகப்படுத்தப்பட்டு செயற்கைப் பசளைப் பாவனைக்கும் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டது. இயற்கைப் பசளை பாவனையை ஊக்குவிக்கவென பல்வேறு திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இத்திட்டங்களுக்கு கமத்தொழிலாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்தோடு பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதையே தவிர்த்துக் கொண்டனர். இருப்பினும் இயற்கைப் பசளை பாவனைக்கு அளிக்கப்பட்ட ஊக்குவிப்பின் அடிப்படையில் நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளும் நஷ்டத்திற்கே உள்ளாகினர்.

இந்தப் பின்னணியில் பாவனையாளர்களுக்காக அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு நாடு உள்ளானது. 2022 ஆம் ஆண்டின் ஜுலை மாதப் பிற்பகுதியில் நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உடனடியாக இரசாயனப் பசளையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்ததோடு அவை நெற்செய்கையாளர்களுக்கு விரைவாகக் கிடைக்கப்பெறவும் ஏற்பாடு செய்தார். அத்தோடு கமக்காரர்களின் நெல்அறுவடைக்கு அதிகபட்ச உத்தரவாத விலையை அளித்ததோடு அவற்றை கொள்வனவு செய்யவும் ஏற்பாடுகளை முன்னெடுத்தார். மேலும் வேளாண்மைச் செய்கையாளர்கள் மானிய அடிப்படையில் இரசாயனப் பசளையைப் பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பணமும் வைப்பிலிடப்பட்டது.

இவ்வாறான ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் பிரதிபலனாக கமத்தொழிலாளர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டன. அவர்கள் நம்பிக்கையுடன் நெற்செய்கையில் ஈடுபடலாயினர். இதன் பயனாக குறுகிய காலப்பகுதியில் நாட்டுக்கு தேவையான நெல் உள்நாட்டிலேயே அறுவடையாகும் நிலைமை உருவானது. அதன் காரணத்தினால் அரசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை முடிவுக்கு வந்தது. 2023 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. இதனை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

2022 ஆம் ஆண்டின் பிற்பகுதி முதல் முன்னெடுக்கப்பட்டுவரும் கமத்தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் பயனாக அரிசி உற்பத்தியில் தன்னிறைவு நிலையை நாடு அடைந்துள்ளது.

இந்நிலையில், 'ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட மத்திய கிழக்கு நாடுகள் அடங்கலாக பல நாடுகளில் இலங்கை அரிசிக்கு கேள்வி அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள விவசாய அமைச்சர், கென்யாவில் இருந்து 10 மெற்றிக் தொன் அரசிக்கு கேள்வி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இலங்கையருக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும். இந்நாட்டை மன்னர்கள் ஆட்சி செய்த காலங்களில் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது போன்று மீண்டும் அரிசியை ஏற்றுமதி செய்யக்கூடிய சூழல் உருவாகி வருகின்றது. அதனால் இந்நாட்டு அரிசிக்கு பல நாடுகளிலும் ஏற்பட்டுவரும் கேள்வி அதிகரிப்புக்கு ஏற்ப அதனை விநியோகிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அப்போது உலகுக்கு அரிசி ஏற்றுமதி செய்யும் மற்றொரு நாடாக இந்நாடு பதிவாகும். அத்தோடு மீண்டும் அரிசி ஏற்றுமதிக்குள் பிரவேசிக்கும் இந்நாடு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் துறையாகவும் மாற்றமடையும். அதனால் தற்போதைய சந்தர்ப்பத்தை உச்சளவில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்நாட்டு நெற்செய்கையைக் கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# பன்னூலாசிரியர் மதினா உம்மாவின் இரு நூல்கள் அக்கரைப்பற்றில் வெளியீடு

அக்கரைப்பற்று பன்னூலாசிரியர் எம். ஐ. மதினா உம்மாவின் 16ஆம், 17 ஆம் நூல்களான கவிதைத் தொகுப்புகள் அடங்கிய 'வாழ்வை நிகர்த்த வானவில்' மற்றும் 'கலை' ஆகிய இரு நூல் வெளியீட்டுவிழா அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சேவையர் ஏ.முகைதீன் பாவா தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு ஆய்வாளர் சிராஜ் மசூஹூர் பிரதம அதிதியாகவும், பிரதேச செயலாளர்களான அல்ஹாபீல் எம். எஸ். எம். றஸ்ஸான் மற்றும் ஏ.சி. ஏ அப்கர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பிறை எப்.எம் கட்டுப்பாட்டாளர் பஷீர் அப்துல் ஹையூம், எழுத்தாளர் அக்கரையூர் அப்துல் குத்தூஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் நூல் நயவுரையை அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் அ. ஸ. அஹமட் கியாஸ் நிகழ்த்தினார்.





இதேவேளை நூலின் முதல் பிரதி நூலாசிரியரால் யூ. எல். அஹமட் மஸாஹிருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் நூலாசிரியருக்கு அக்கரையூர் அப்துல் குத்தூஸ் தம்பதியர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி வைத்தனர்.

**எம். எப். றிபாஸ்**
**(பாலமுனை தினகரன் நிருபர்)**

# தியத்தலாவை முகாம் இராணுவ அதிகாரிகளால் பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழம் விநியோகம்

## புனித ரமழான் நோன்பு மாதத்தை முன்னிட்டு நல்லிணக்க செயற்பாடு

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு தியத்தலாவை முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளினால் பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. புனித ரமலான் மாதத்தினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், தியத்தலாவை இராணுவ முகாம் மேஜர் ஜெனரல் ரோஹித அலுவிகார பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேரீச்சம்பழத் தொகுதியை வழங்கி வைத்தார்.

இதனையடுத்து ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழப் பெட்டிகள் சில தினங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டன. லெப்ரினன்ற் கேர்ணல் துவான் ஏற்பாடு செய்திருந்த பேரீச்சம்பழ விநியோக நிகழ்வில் தியத்தலாவை இராணுவ முகாமைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தியத்தலாவை, கஹகொல்ல அல் பதுரியா பெரியபள்ளிவாசலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பள்ளிவாசல் பரிபாலனசபைத் தலைவர் தேசமான்ய எம்.ஏ.எம் ஹசனார் (ஜே. பி) இராணுவ உயர் அதிகாரிகளை செங்கம்பளத்தில் வரவேற்றார்.

அதன் பின்னர் பள்ளிவாசல்களில் கையளிப்பதற்கான பேரீச்சம்பழங்கள் அடங்கிய பெட்டிகளை இராணுவ அதிகாரிகளிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொண்டனர்.





இந்நிகழ்வின் போது பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். புனித ரமழான் நோன்பு மாதத்தை முன்னிட்டு நல்லிணக்க செயற்பாடாகவே பேரீச்சம்பழங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

**(ஊவா சுழற்சி நிருபர்)**

# ஓய்வுபெற்றுள்ள கோட்டக் கல்விப்பணிப்பாளர் சரவணமுத்துவுக்கு பாண்டிருப்பில் பாராட்டு விழா

## மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/92 அணியினர் நடத்திய ஆறாவது ஒன்றுகூடல்

ஓய்வுபெறும் கல்முனை தமிழ்ப் பிரிவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்துவுக்கான சேவைநலன் பாராட்டு விழாவும், மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/ 92 அணியினரின் ஆறாவது ஒன்றுகூடலும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை(03) பாண்டிருப்பில் நடைபெற்றன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த புலன அணி ஆசிரியர்கள் சுமார் 50 பேர் இந்த ஒன்றுகூடலிலும், பாராட்டு விழாவிலும் கலந்து கொண்டார்கள் .

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/ 92 அணியினரின்ஆறாவது ஒன்றுகூடல் புலன அணியின் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெறும் கல்முனை தமிழ்ப் பிரிவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்துவுக்கான பாராட்டு, கௌரவிப்பு விழாவின் போது அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவில் பங்கேற்ற அனைவரும் தனது கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

கவிமாமணி எஸ்.புண்ணியமூர்த்தி வாழ்த்துப்பா வாசித்தளித்தார். அங்கு விநோத விளையாட்டுகளும் இடம்பெற்றன. பாடல்களை சோதி,







சுகுணா, சுஷ்மிதா ஆகியோர் பாடினார்கள். டில்பிரபா கவிதை பாடினார்.

திருகோணமலை புலன உறவுகளான சண்முகநாயகம், சசிகலா, இந்திராணி, நளினி, கிரிஜா, குமுதினி ஆகியோர் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வி.ரி.சகாதேவராஜா**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

# உலகில் முதலாவதாக மெய்நிகர் சுற்றுலா முறையை அறிமுகம் செய்த சவூதிஅரேபியா

சவூதி கலாசார அமைச்சு உலகின் முதலாவது தேசிய கலாசார மெட்டாவெர்ஸ் தளத்தினை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இது பயனர்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) வரலாற்று, உல்லாசப் பயணங்களில் பங்கேற்க உதவுகிறது. மெட்டாவெர்ஸ் இன் இந்த அற்புதமான கண்டுபிடிப்பானது ஜெனரேட்டிவ் மீடியா இன்டலிஜென்ஸ் (GMI) எனும்



செயற்கை நுண்ணறிவு அமைப்பு மூலம் மேம்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

GMI உடன் இணைந்து ஹைப்பர் லெட்ஜர் ஃபேப்ரிக் 2.5 பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி droppGroup மற்றும் 'phygital' metaverse உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த அற்புதமான தளம் மெய்நிகர் ஆய்வு மற்றும் அத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவூதி ஹெரிடேஜ் மெட்டாவர்ஸ் தளமானது எண்ணற்ற வசீகர அனுபவங்களை பயனர்களுக்கு வழங்குகிறது. சவூதி அரேபியாவின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் கலாசார காட்சிகள் வரலாற்றுச் சுற்றுப்பயணங்கள், இசை நிகழ்ச்சிகள், கலைக் கண்காட்சிகள் மற்றும் சிறு விளையாட்டுகள் முதல் பல்வேறு வகையான செயல்பாடுகளை தூர தேசங்களில் இருந்து நிஜத்தில் அனுபவிப்பதை போல அனுபவிப்பதற்கான சந்தர்பத்தை இந்தத் தளம் ஏற்படுத்தித் தருகிறது.



மேலும் இத்தளமானது சவூதியின் புரட்சிகர தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு ஒரு சான்றாக உள்ளது. இது அண்மைய, சவூதியின் நிறுவன தின சிம்பொனி கச்சேரி போன்ற நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பை வழங்குகியதும் குறிப்பிடத்தக்கது. இந்த டைனமிக் டிஜிட்டல் சூழலானது மொபைல் போன்கள், VR ஹெட்செட்கள் மற்றும் டெஸ்க்டாப்புகள் உட்பட பல சாதனங்களின் மூலம் அணுகக்கூடியதாக உள்ளது.





சவூதி கலாசாரத்தை சர்வதேச மக்களும் ரசிக்க, அனுபவிக்க வேண்டும் என அந்நாட்டு கலாசார அமைச்சகம் விரும்புகிறது. எனவே அவர்கள் உலகில் எங்கிருந்தாலும் கலாசார நிகழ்வுகளை அணுகச் செய்வதற்கான முயற்சியாக இது இருக்கிறது.

இந்தப் புதிய முன்முயற்சி, மக்கள் கலாசாரத்தை குறிப்பாக ஒன்லைனில் எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதைப் பிரதிபலிக்கிறது. மெய்நிகர் அனுபவங்களில் பங்கேற்பதன் மூலம், மக்கள் கலாசாரங்களை தம்மிடையே பகிர்வதற்கான புதிய வழியை உருவாக்கித் தருகிறது. இது தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரியம் இரண்டினையும் இணைக்கும் பாலமாக காணப்படுகிறது.

**காலித் ரிஸ்வான்**

# யதார்த்தங்களைப் புரிந்துகொள்ள அழைப்பு விடுக்கும் இறைவார்த்தை

## உலக குழந்தைகள் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி

"இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் மே மாதம் 25 ,26 ஆகிய இரு தினங்கள் திருஅவையில் முதல் தடவையாக உலக குழந்தைகள் நாள் சிறப்பிக்கப்பட உள்ளது.

"இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" என்ற திருவெளிப்பாடு நூலின் இறைவார்த்தைகளானது குழந்தைகளைப்போல ஞானமுள்ளவர்களாகவும், புதியவற்றை புரிந்து கொள்ளவும், நமக்குள்ளும் நம்மைச்சுற்றிலும் நடக்கும் எதார்த்தங்களைப் புரிந்துகொள்ளவும் அழைப்பு விடுக்கின்றது என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் மே மாதம் 25 ,26 ஆகிய இரு தினங்கள் திருஅவையில் முதல் தடவையாக உலக குழந்தைகள் நாள் சிறப்பிக்கப்படவுள்ளது.

அந்த நாளுக்கான செய்தியை மார்ச் 2ம் திகதி சனிக்கிழமை திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ளார்.

இயேசுவுடன் இணைந்து நமது மனித குடும்பத்தைப் புதுப்பிப்பதற்கானக் கனவினைக் காணுதல், நமது பொதுவான இல்லமாகிய இப்பூமியைக் கவனித்துக் கொள்ளுதல், மனித உடன்பிறந்த உணர்வுடன் கூடிய சமுதாயத்திற்காக பணியாற்றுதல் மிக முக்கியம் என்றும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள், பிறருக்கு வணக்கம் செலுத்துவது, அனுமதி கேட்பது, மன்னிப்பு கேட்பது, நன்றி சொல்வது போன்ற சிறிய விடயங்களில் மனித குலத்தைப் புதுப்பிப்பதற்கான இக் கனவு தொடங்குகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகைய சிறிய விடயங்களில் நாம் எடுக்கும் சிறு முயற்சியால் உலகம் மாறும் என்றும் நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம். என்ற புனித பவுலின் வரிகளையும் மேற்கோள்காட்டியுள்ளார்.



ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து மகிழ்ச்சியுறும் என்ற இறைவார்த்தைகளுக்கிணங்க, நாம் மகிழ்வுடன் இணைந்து வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

**குழந்தைகள் உலக நாளுக்கான திருத்தந்தையின் செய்தி**

பரிசுத்த வேதாகமம் நமக்குக் கற்பிப்பது போலவும், இயேசு அடிக்கடி சுட்டிக்காட்டியது போலவும், கடவுளின் பார்வையில் "குழந்தைகளாகிய நீங்கள் விலையேறப்பெற்றவர்கள்" (எசாயா 43:4). எல்லா குழந்தைகளும், எல்லா இடங்களிலும், ஒவ்வொரு நபரின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான விருப்பத்தின் அடையாளமாகத் திகழ்கின்றார்கள். குழந்தைகளாகிய நீங்கள் நாம் அனைவரும் குழந்தைகள், சகோதர சகோதரிகள் என்பதை நினைவூட்டுகிறீர்கள். இந்த உலகத்திற்கு பிறரால் கொண்டு வரப்பட்ட நாம், பிறரை அன்பு செய்வதிலும், பிறரிடம் இருந்து அன்பைப் பெறுவதிலும் வளர்ச்சி அடைய வேண்டும்.

நாமும் நமது உலகமும் வளர, செழிக்க, ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பது மட்டுமன்று, எல்லாவற்றிற்கும் மேலாக நாம் இயேசுவோடு ஒன்றிணைந்து இருக்க வேண்டும். அவரிடமிருந்தே நாம் மிகுதியான துணிவைப் பெறுகின்றோம். அவர் எப்போதும் நமக்கு மிக நெருக்கமாக இருக்கிறார், அவருடைய தூயஆவியின் ஆற்றல் நமக்கு முன்னாலும், உலகின் அனைத்துப் பாதைகளிலும் நம்முடன் செல்கின்றது. இயேசு நம்மிடம் "இதோ, நான் எல்லாவற்றையும் புதியது ஆக்குகிறேன்" (திருவெளிப்பாடு 21:5) என்று கூறுகின்றார்.

முதல் உலக குழந்தைகள் நாளுக்காக நான் தேர்ந்தெடுத்துள்ள கருப்பொருளும் இதுதான். இந்த வார்த்தைகள், குழந்தைகளைப்போல ஞானமுள்ளவர்களாகவும், புதியவற்றை புரிந்து கொள்ளவும், நமக்குள்ளும் நம்மைச்சுற்றிலும் நடக்கும் எதார்த்தங்களைப் புரிந்துகொள்ளவும் அழைப்பு விடுக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

மெரினா ராஜ்...

# ஹினிதும கல்வாரி திருத்தல தவக்கால நிகழ்வுகள்



ஹினிதும கல்வாரி திருத்தல தவக்கால யாத்திரைகள் ஆரம்பமாகியுள்ளன.

தவக்காலத்தின் இரண்டாம் மூன்றாம் வார இறுதி நாட்களில் பக்தர்களுக்கான தவக்கால சிறப்பு வழிபாடுகள் தமிழில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பரிசுத்த வாரத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி குருத்தோலை ஞாயிறு தினத்தன்று காலை 7.00 மணிக்கு காலி மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு ரேமன் விக்ரமசிங்க ஆண்டகையின் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெறும்.

இம்மாதம் 28 ஆம் திகதி பெரிய வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு திருப்பலிப் பூஜையும் 29ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு திருச்சிலுவை பாதை தியானத்தை தொடர்ந்து திருப்பாடுகளின் வழிபாடு திருச்சிலுவை மலை சிற்றாலயத்தில் காலி மறை மாவட்டஆயரினால் நடத்தப்பட வுள்ளது.

30ஆம் திகதி அல்லேலூயா சனிக்கிழமை இரவு 7.00மணிக்கு மாலை ஆராதனையும் 31ம் திகதி ஈஸ்டர் ஞாயிறு காலை 8:30 மணிக்கு ஈஸ்டர் பண்டிகை சிறப்பு திருப்பலியும் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் சித்திரை 7ஆம் திகதி யாத்திரை காலத்தின் இறுதி நாள் அன்று காலை 8:30 மணிக்கு நன்றித் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

என திருத்தலத்தின் பரிபாலகர் அருட்பணி மைக்கல் இராஜேந்திரம் தெரிவித்துள்ளார்.




# ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி









சிலாபம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கலாநிதி பேரருட்திரு தொன் ஜயசூரிய ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். அவரது ஆயர்த்துவ திருநிலை அபிஷேக திருப்பலி பூஜை வழிபாடுகள் கடந்த 2ஆம் திகதி சிலாபம் புனித கார்மேல்மாதா பேராலயத்தில் நிறைவேற்றப்பட்டன. சிலாபம் மறைமாவட்ட முன்னாள்ஆயர் பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை உட்பட பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், மறை மாவட்ட மக்கள் என பெருந்திரளானவர்கள் இந்த விசேட திருப்பலியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: பிரசாத் பூர்ணிமல்)

# அகத்தூய்மையை வலியுறுத்தும் தவக்காலம்

## இறைமக்கள் சமூகம் என்ற அழகிய கோயில்கள் உலகெங்கும் கட்டியெழுப்பப்பட வேண்டும்

தன்னையே சுத்தம் செய்துகொள்வது மனிதர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. மனிதர்கள் மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள இயற்கையும், தன்னைத் தானே சுத்தம் செய்து கொள்வதை நாம் அறிவோம். தன்னையே சுத்தம் செய்துகொள்ளும் இயற்கையை மீண்டும் குப்பையாக்குவதில் மனிதர்களாகிய நம் பங்கு மிக அதிகம் என்பதையும் வெட்கத்துடன், வேதனையுடன் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

'சுத்தப்படுத்துதல்' என்பது தவக்காலத்தின் மைய இலக்குகளில் ஒன்று. புறத் தூய்மையைவிட, அகத் தூய்மையை வலியுறுத்தும் காலம், தவக்காலம். இத்தருணத்தில், இயேசு எருசலேம் கோவிலைச் சுத்தம்செய்யும் நிகழ்வு, இன்றைய நற்செய்தியாகத் (யோவா. 2:1325) தரப்பட்டுள்ளது. 'இயேசு கோவிலைத் தூய்மையாக்குதல்' என்ற இந்நிகழ்வு, நான்கு நற்செய்திகளிலும் சொல்லப்பட்டுள்ளது (மத். 21:1217; மாற். 11:1519; லூக். 19:4548; யோவா. 2:1322நமது ஆலயங்கள், கோவில்கள், மசூதிகள் மற்றும் யூத தொழுகைக்கூடங்கள் ஆகியவை, முன்னெப்போதும் தேவைப்படாத அளவு சுத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது..

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகத்தின் வழியே சித்திரிக்கப்பட்டுள்ள இயேசுவின் உருவம் நமக்குள் உருவாக்கும் உணர்வுகளிலிருந்து நம் பாடங்களை கற்றுக்கொள்ளலாம். இயேசு, கோவிலில் ஆடு, மாடு, புறா விற்போரையும் அங்கே உட்கார்ந்திருந்த நாணயம் மாற்றுவோரையும் கண்டார்;

அப்போது கயிறுகளால் ஒரு சாட்டை பின்னி, அவர்கள் எல்லாரையும் கோவிலிலிருந்து துரத்தினார்; ஆடு மாடுகளையும் விரட்டினார்; நாணயம் மாற்றுவோரின் சில்லறைக் காசுகளைக் கொட்டிவிட்டு மேசைகளையும் கவிழ்த்துப் போட்டார். அவர் புறா விற்பவர்களிடம், "இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள்; என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள்" என்று கூறினார். (யோவான் 2:1416) இந்த வசனங்களில் சித்திரிக்கப்பட்டுள்ள இயேசு நமக்குள் நெருடல்களை உருவாக்குகிறார்.

தவக்காலத்தின் முதல் மூன்று ஞாயிறு வழிபாட்டிலும் இயேசுவை வெவ்வேறு சூழல்களில், வெவ்வேறு கோணங்களில் சந்தித்து வருகிறோம். தவக்காலத்தின் முதல் ஞாயிறு, பசியோடு, களைப்போடு இருந்த இயேசுவை, நாம் பாலைநிலத்தில் சந்தித்தோம்.

இரண்டாவது வாரம், தோற்றமாற்றம் அடைந்து, ஒளிவெள்ளத்தில் தோன்றிய இயேசுவை மலைமீது சந்தித்தோம். மூன்றாவது ஞாயிறான கடந்த ஞாயிரில் இயேசுவை, எருசலேம் கோவிலில் சந்தித்தோம். கோபக்கனல் தெறிக்க, சாட்டையைச் சுழற்றும் இந்த இயேசு, நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்துகிறார்.

தவக்காலத்தின் மூன்று ஞாயிறுகளிலும் நாம் சிந்தித்த இக்காட்சிகளை ஓவியங்களாகப் பார்த்திருக்கிறோம். இந்த மூன்று ஓவியங்களில், பாலை நிலத்திலும், மலைமீதும் நாம் சந்தித்த இயேசுவை, கோவில்களில் பீடமேற்ற தயங்கமாட்டோம்.

ஆனால், எருசலேம் கோவிலில் சாட்டையைச் சுழற்றி வியாபாரிகளை விரட்டும் இயேசுவின் ஓவியத்தை, நம் ஆலயங்களில் வைத்து வழிபடமுயுமா என்பது பெரும் கேள்விக்குறிதான்.

பொதுவாக, கோவில்களில் நாம் பீடமேற்றும் இயேசுவின் திரு உருவங்கள் சாந்தம் நிறைந்த உருவங்கள். வெற்றிவாகை சூடிய உருவங்கள் அல்லது சிலுவையில் துன்புறும் உருவங்கள். கிறிஸ்தவ மறையின் தொடக்க காலத்தில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவும் சவாலாக இருந்தார் என்பதை கடந்த ஞாயிறு இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடியார் இவ்வாறு கூறுகிறார்:

நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக் கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது. (1 கொரி. 1:2324)

இந்த மூன்று நிகழ்வுகளில் மற்றோர் அம்சத்தையும் நாம் சிந்திப்பது பயனுள்ளது. பாலைநிலம், மலை, கோவில் ஆகிய மூன்று இடங்களும் இறைவனைச் சந்திக்கக்கூடிய இடங்கள் என்பது நமக்குத் தெரிந்த உண்மை. இவற்றில், பாலை நிலத்திலோ, மலையிலோ, இறைவனை நாம் தேடிச்செல்ல வேண்டும். அவ்வளவு எளிதில் நம் கண்களுக்கு அவர் தெரிவதில்லை. இறைவனை எளிதில் காண்பதற்கென மனிதர்கள் உருவாக்கிய இடம்தான் கோவில். அந்தக் கோவிலுக்குச் சென்ற இறைமகனாகிய இயேசு, அங்கு, இறைவனைக் காணமுடியாததால் கோபமுற்று, சாட்டையைக் கையில் எடுக்கிறார்.

கோவிலுக்குச் சென்றால் நாம் தூய்மை பெறலாம் என்ற எண்ணம் நம்மில் பலருக்கு உண்டு. ஆனால், இங்கோ இயேசு கோவிலைத் தூய்மைப் படுத்துகிறார். இஸ்ரயேல் மக்களின் உயிர்நாடியாக விளங்கிய எருசலேம் கோவிலில் இயேசு ஏன் கோபத்துடன் நடந்துகொண்டார் என்பதன் காரணத்தைப் புரிந்துகொள்வது பயனளிக்கும்.

எருசலேம் கோவிலில் அன்று நடந்த நிகழ்வுகளுக்கும் இன்று நம் திருத்தலங்களில் காணும் பல நிகழ்வுகளுக்கும் நெருங்கியதொடர்புகள் இருந்தால், நாம் கேள்விகளை எழுப்பவும் பதில்களைத் தேடவும் கடமைப்பட்டுள்ளோம். எருசலேம் கோவிலைச் சந்தையாக மாற்றியவர்களை, சாட்டை கொண்டு விரட்டியடித்த இயேசு, இன்று, நம் கோவில்களுக்கு வந்தால் என்ன நினைப்பார், எப்படி நடந்துகொள்வார் என்பதைச் சிந்தித்துப்பார்க்க, நமக்கு ஞாயிறு, நமக்கு ஒரு வாய்ப்பை அளித்துள்ளது.



யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்ததால் இயேசு எருசலேமுக்குச் சென்றார் (யோவான் 2: 13) என்று இன்றைய நற்செய்தி துவங்குகிறது. இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பாஸ்கா விழாவையொட்டி எருசலேமுக்குச் செல்லவேண்டும், அந்த ஆண்டுக்குரியக் காணிக்கையை, கோவிலில் செலுத்தவேண்டும். இது இஸ்ரயேல் மக்களுக்கு விதிக்கப்பட்ட கட்டளை. இயேசுவும் ஒரு யூதருக்குரிய கடமைகளை நிறைவேற்ற கோவிலுக்குச் சென்றார். அங்கு சென்றவர், அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்தார்.

ஏற்கனவே, 12 வயது சிறுவனாக, முதல்முறை, எருசலேம் கோவிலுக்குச் சென்றபோது, அங்கு அவர் கண்ட ஒரு சில காட்சிகள், அவரைப் பாதித்திருக்க வேண்டும். அதன்பின், ஒவ்வோர் ஆண்டும், அவர் அங்கு சென்றபோதெல்லாம், அவர் உள்ளத்தை வேதனையும், கேள்விகளும் நிறைத்திருக்க வேண்டும். இத்தனை ஆண்டுகள் அந்த வேதனைகளுக்கும், கேள்விகளுக்கும் விடைதேடி வந்த இயேசு, அன்று தானே விடையாக மாறத் துணிந்தார்.

அந்தக் கோவில், இருபது நூற்றாண்டுகளைக் கடந்து உறுதியுடன் நிமிர்ந்து நிற்கிறது. இந்தக் கோவிலில் வியாபாரங்கள் கிடையாது, கடவுளை விலை பேசமுடியாது, வெளிச் சுற்று, உள்சுற்று என்ற பாகுபாடுகள் கிடையாது, வறியோர், செல்வந்தர், பாவி, புண்ணியவான், யூதர், பிற இனத்தவர், ஆண், பெண் என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல் அனைவரும் உள்ளே வரலாம். இறைவனை, எந்தத் தடையும் இல்லாமல், கண்ணாரக் கண்டு நிறைவடையலாம்.

பாகுபாடுகள் ஏதுமற்ற இறைமக்களின் சமுதாயம் என்ற அழகிய கோவில்கள் உலகெங்கும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுவோம். அனைத்திலிருந்தும் உலகை, இறைவன் தூய்மையாக்க வேண்டும் என்று செபிப்போம்.

அருட்பணி எப். எக்ஸ் ஜெரோம்...

# கூட்டுறவு வர்த்தகம் விவசாயப் புத்தாக்கத் திட்டமாக நவீனமயமாக்கப்பட வேண்டும்

மக்களுக்குத் தரமான வாடிக்கையாளர் சேவை மற்றும் வங்கிச் சேவைகளை வழங்கும் நோக்கில், ஹோமாகம, மேற்கு ஹொரகல கூட்டுறவு பிரதேசம் நவீனமயமாக்கப்பட்டு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் அமைச்சரின் வழிகாட்டலின் பேரில், "மினி கோப் சுப்பர்" வர்த்தக நிலையமாக மக்களுக்கு வழங்கப்பட்டது. இதேவேளை, நவீனமயமாக்கப்பட்ட ஹோமாகம பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான மேற்கு ஹொரகல கூட்டுறவு கிராமிய வங்கிக் கிளையும் அமைச்சரினால் மக்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வையொட்டி, கூட்டுறவு கிராமிய வங்கியில் கணக்கு வைத்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் தெரிவு செய்யப்பட்ட கணக்குகளை கொண்டவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட விசேட நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், "திருட்டு, ஊழல், மோசடி இல்லாமல் எந்த ஒரு நிறுவனத்தையும் உருவாக்க முடியும், ஆனால் அரசியலுக்கு உட்படுத்தப்பட்டு, அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்படி நிறுவனங்களை வழிநடத்துவதன் மூலம், அவை அனைத்தும் சிதைந்து, அழிக்கப்படுகின்றன. எனது அமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் தலைவர்களாக அந்தந்த துறைகளில் நல்ல அனுபவமுள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள். இலங்கை போக்குவரத்து சபை, புகையிரத திணைக்களம், அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனம், லேக் ஹவுஸ் நிறுவனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற



கூட்டுறவு கிராமிய வங்கியில் கணக்கு வைத்துள்ள பாடசாலை மாணவி ஒருவருக்கு அமைச்சரால் அப்பியாச கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்களுடன் உண்டியல் ஒன்றும் வழங்கப்பட்டபோது....

எந்த ஒரு நிறுவனத்துக்கும் எனது ஆதரவாளர்கள் நியமிக்கப்படவில்லை. தொழில்சார்ந்தவர்களுக்கு தொழில் சுதந்திரம் வழங்குவதன் மூலம் இந்த நாட்டை தொலைநோக்கு திட்டத்தின் கீழ் கட்டியெழுப்ப முடியும். ஒரு காலத்தில் நாட்டின் மதிப்புமிக்க இயக்கமாக விளங்கிய கூட்டுறவு வர்த்தகம் பாதிப்படைந்து மூடப்படும் நிலையில் இருந்த வேளையில், ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் செலுத்த வேண்டிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய, துறைக்கு பொறுப்பாளர் என்ற முறையில் நடவடிக்கை எடுத்தேன் . மேலும், நாடு முழுவதும் தனியார் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்ட போது, கூட்டுறவு சங்கமும் கோப் சிட்டி கருத்துருவின்படி நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல்வேறு மோசடிகள் மூலம் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மிகவும் பெறுமதியான சொத்துக்கள் இழக்கப்படுவதைத் தடுக்க முடிந்தது.

ஆனால் இதுவரை இலங்கையில் கூட்டுறவு சங்கம் பாரியச் சரிவை சந்தித்துள்ளது. அதற்கு நான் பார்க்கும் முக்கிய காரணம் கூட்டுறவு வர்த்தகத்தில் அரசியல் நுழைவதுதான். ஆனால் வீழ்ந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப செயலூக்கமுள்ள அரசியல்வாதிகளையோ அல்லது அவர்களுக்கு நெருக்கமானவர்களையோ கூட்டுறவு நிர்வாகத்தில் உயர் பதவிகளில் அமர்த்துவதை அனுமதிக்கக் கூடாது. மேலும், திருட்டு, மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகளே கூட்டுறவு சங்கத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகிறது. இந்த அனைத்துக் காரணங்களின் அடிப்படையிலும் இந்தக் கூட்டுறவு வர்த்தகத்தை முழுமையாக மறுசீரமைத்து மிகப் பெரிய தேசியப் பணிக்கு பங்களிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையுடனான கலந்துரையாடலின்போது கண்டறியப்பட்டது தொடர்பாக அறிவிக்கப்பட்டது. இந்த அனைத்து நிறுவனங்களையும் வெற்றிகரமாக உருவாக்கக்கூடிய ஒரே முறை டிஜிட்டல் மயமாக்கல் மட்டுமே. இது உலகின் பல நாடுகளில் பின்பற்றப்படும் முறை.மேலும், நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு அந்நியச் செலாவணி செல்வதைத் தடுக்கவும், அந்நியச் செலாவணியின் அளவை அதிகரிக்கவும், கூட்டுறவு வர்த்தகத்தை விரைவில் உற்பத்தித் தொழிலாக மாற்ற வேண்டும். இதை விவசாய கண்டுபிடிப்பு திட்டமாக நவீனப்படுத்த வேண்டும்" என்றார். ஹோமாகம பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திருமதி ஆச்சார்ய திலகா கத்ரியராச்சி, நிர்வாக சபையைச் சேர்ந்த சமன் மஞ்சுள உள்ளிட்ட அதிகாரிகள், ஹோமாகம பிரதேச சபையின் செயலாளர், பிரதேசத்தின் பொதுப் பிரதிநிதிகள், பிரதேசவாசிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மத வழிபாட்டுத் தலங்களுக்கான...

குறைக்கப்பட்டுள்ளதுடன் அரச துறை நிறுவனங்களுக்கு 22 வீதத்தால் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வீதி விளக்குகளுக்கான மின் கட்டணம் 20 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மின்சார சபை கடந்த ஜனவரி மாதம் 3.34 மற்றும் அதன்பின்னர் பெப்ரவரி 22 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட மீள் யோசனையில் 14 வீதத்தால் மின்கட்டணத்தை குறைப்பதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. மின்சார சபை முன்வைத்த செலவுகள் தொடர்பான தரவு சம்பந்தமாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு மீளாய்வு செய்துள்ளது. அந்தவகையில் மக்கள் கருத்தின்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை கவனத்திற்கொண்டு 21.9 வீதத்தால் மின் கட்டணத்தை குறைப்பதற்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 20 கோடி ரூபா பெறுமதியான...

முனைய பரிசோதகர் அலுவலகத்தில் பணிபுரியும் சிற்றூழியராவார். இவர்,நேற்று கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை. இச்சந்தர்ப்பத்திலேயே சட்ட விரோதமாக மேற்படி தங்கத்தை வெளியே கொண்டு செல்ல இவர் முயன்றுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தங்க நகைகள் அடங்கிய பொதியை விமான நிலையத்தில் வெளிச்செல்லும் முனையத்தில் வாகனங்கள் நிறுத்தும் பகுதியிலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு முனைந்துள்ளார்.இதன்போது காலை 8.15 மணியளவில் இவர் கைது செய்யப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த பொதியில் தங்கத்தினால் தயாரிக்கப்பட்ட 20 அட்டைகள், 12 தங்க ஜெல் வில்லைகள், 2 தங்க மாலைகள், வளையல்கள், காதணிகள் உள்ளடங்குகின்றன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது.

## மத்திய வங்கி அதிகாரிகளுக்கு...

எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என, எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதற்கமையவே இவ்விடயம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக அமைச்சரவைக் கூட்டத்திற்கு மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டனர்.

அத்துடன் பாராளுமன்ற கட்டிடத்தில் இன்று நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கும் அரசாங்க நிதி தொடர்பான குழுவிற்கும் மத்திய வங்கியின் முக்கிய உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டு இவ்விடயம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது .கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கும், அரசாங்க நிதி பற்றிய குழு கூட்டம் இன்று முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல...

அந்நபருக்கு எதிராக வெலிகம பொலிஸார் வெளிநாட்டு பயணத் தடையையும் பெற்றிருந்தனர். வெலிகம மிதிகம பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதான இந்நபர் பிரபல போதைப்பொருள் வர்த்தகர் என்பது விசாரணைகளில் தெரியவருகிறது. அவர் மாத்தறை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 07 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதிலிருந்து தப்பிக்கும் பொருட்டே இந்நபர், வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

## கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு...

அலுவல்கள் பற்றியும் இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் (08) வெள்ளிக்கிழமை பொது விடுமுறை என்பதால் அன்றைய தினம் பாராளுமன்ற அமர்வு இடம்பெறாது. இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவுள்ளதுடன், மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப 10.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை கடந்த (20) இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்குவிடுதல் (திருத்தச்) சட்டமூலம், உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புத் (திருத்தச்) சட்டமூலம், கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் என்பன இரண்டாவது தினமாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணி தொடக்கம் பி.ப 5.30 மணி வரை அரசாங்க தரப்பினால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கூகுளை உபயோகித்து அலரி...

மதுபானம் அருந்தியுள்ளனர். கூகுள் வரைபடத்தை உபயோகித்து அவர்கள் தங்கியிருக்கும் முகந்திரம் வீதி, ஹோட்டலுக்கு செல்லும் வேளையில், அலரி மாளிகையை நெருங்கினர். இந்நிலையில், நடந்து வந்த வீதி முடிவுற்றதால் மதில் மீது ஏறி அலரி மாளிகை பிரதேசத்திற்குள் பிரவேசித்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அலரி மாளிகையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவர்கள் அவர்கள் இருவரையும் கொள்ளுப்பிட்டி நடமாடும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி நபர்கள் இருவரும் பன்னிப்பிட்டிய மற்றும் மகுருவில பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 14ஆம் திகதி அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வீதி அனுமதிப்பத்திரத்துக்கு இலஞ்சம்...

பிரதம மஜிஸ்திரேட் நீதவான் பிரசன்ன அல்விஸ் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

சமன் பிரியங்கர அதுகோரள மற்றும் லலித் பிரசன்ன ஆகிய இருவருமே இவ்வாறு விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபரான பிரியங்கர அதுகோரல சில வருடங்களுக்கு முன் பத்து இலட்சம் ரூபாவை லஞ்சமாக பெற்றுக் கொண்ட வலல்லாவிட பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உதேனி அதுகோரளவின் சகோதரராவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க லஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள விடயங்களை கவனத்தில் கொண்ட பின்னர், இச்சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## முட்டை விலையை குறைக்காவிடின்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச வணிக பல்நோக்கு கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த 40 மில்லியன் முட்டைகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் வாரத்தில் முட்டையின் விலையை 50 ரூபாவை விட குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறைக்காவிட்டால் அடுத்த மாதம் முட்டை கொள்வனவு மேற்கொள்ளப்படுமென்றும் அரசாங்கம் தெரிவிக்கின்றது. சந்தையில் தற்போது முட்டையொன்றின் விலை 60 – 65 க்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. முட்டை உற்பத்தியாளர்கள் தாம், நினைத்தவாறு தன்னிச்சையாக முட்டை விலைகளை அதிகரித்து வருவதால் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.

ஒரு முட்டையை உற்பத்தி செய்வதற்கு 30 ரூபாவே செலவாகிறது. இந்நிலையில் உற்பத்தியாளர்கள் மற்றும் முட்டை மாபியாக்களால் விலைகள் அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

## இம்தியாஸ் பாக்கீர்...

அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் 19 அத்தியாயங்களாக தமது இளமைப் பருவம், பாடசாலை கல்வி, பல்கலைக் கழக கல்வி, சட்டக் கல்லூரி அனுபவ பதிவுகளுடன் ஐந்து தசாப்தங்கள் கொள்கை ரீதியான அரசியல் பயணம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை உள்ளடக்கியதாக இந்த நூல் அமைந்துள்ளதாக பாக்கீர் மாக்கார் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## மின்சாரம், எரிபொருளை...

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், எரிபொருள் உற்பத்தி மற்றும் எரிபொருள் விநியோகம், பகிர்ந்தளிப்பு தொடர்பான சகல சேவைகளும் இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

## மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்ட...

தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பயங்கரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 56 இலங்கையர்களில் 08 பேர் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மியன்மார் பாதுகாப்பு படையினரின் தலையீட்டினாலேயே இவர்கள் விடுதலையானதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்டவர்கள் தற்போது மியன்மார் மியாவடி பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளனர்.

ஏனையவர்களை மீட்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்தில் பிரான்ஸ்...

பஸ் வண்டியும் காரும் நேருக்கு நேர் மோதியதில், இந்த விபத்து ஏற்பட்டது. காயமடைந்தவர்களுள் ஒரு பிக்குணியும் உள்ளார்.இவர்கள் அனைவரும் தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டியும், தம்புள்ளையிலிருந்து சீகிரியாவை நோக்கி பயணித்த பிரான்ஸ் நாட்டவர்களை ஏற்றிச் சென்ற காரொன்றுமே விபத்துக்குள்ளானது.

## தொல்பொருள் பாரம்பரியத்தை...

எதிர்பார்ப்பாகும்.இது தொடர்பில், சில அடிப்படை விதிகளை தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கான கருத்துக்களும் ஆலோசனைகளும் பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்டு வருகிறது. இதற்கான முன்மொழிவுகளை வழங்குமாறு மகாநாயக்க தேரர்களிடமும் சங்க சபைகளிடமும் வழங்குமாறு கேட்டுள்ளோம். இது எளிதான காரியம் அல்ல. இலங்கையை தேரவாத சர்வதேச பௌத்த நிலையமாக மாற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்தை நடைமுறைப்படுத்த அமைச்சு என்ற ரீதியில் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இன்றைய பலன்கள்

(05.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :** உத்தியோகத்தில் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். சம்பள உயர்வு இடமாற்றமும் வரக்கூடும். சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் பணிகளில் அதிக கவனத்தோடு செயல்பட வேண்டும்.

**ரிஷபம் :** தீவிர முயற்சிகளோடு காரியங்களில் செய்யப்பட்டாலும் சிலவற்றில் மட்டுமே சிறப்பான வெற்றிகளை அடைவீர்கள். புதிய முயற்சிகளில் தடை தாமதங்களை சந்திக்க நேரலாம்.

**மிதுனம் :** சில பிரச்சினைகளுக்கு சமூகத் தீர்வு கிடைக்கும். பணவரவு இருந்தாலும் செலவும் அதிகரிக்கும். கை நழுவி போன காரியம் ஒன்று எதிர்பாராமல் நன்றாக நடைபெறக்கூடும்.

**கடகம் :** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் வந்து சேரும் வேலையில் ஏற்பட்ட சிறு தவறால் உயர் அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள்.

**சிம்மம் :** திட்டமிட்ட பண வரவு தாமதமாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்திலேயே பொறுப்புக்கள் மாறக்கூடும்.

**கன்னி :** வெளியூர்களில் இருந்து வரும் தகவல் வருத்தம் தரலாம். உத்தியோகத்தர்கள் விடுமுறையில் உள்ளவர்களின் வேலையும் சேர்த்து செய்ய நேரலாம்.

**துலாம் :** உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் விருப்பப்படி முக்கிய பணி ஒன்றை சிறப்பாக செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**விருச்சிகம் :** பண வரவுகள் சிறிது அலைச்சலுக்கு பின் வந்து சேரும். உத்யோகத்தில் சிலருக்கு பதவி உயர்வும் செல்வாக்கும் அதிகமாகலாம். உயர் அதிகாரிகளின் விருப்பப்படி தள்ளி வைத்த வேலையை செய்ய முற்படுவீர்கள் .

**தனுசு :** உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவுடன் சில சலுகைகளை அனுபவிப்பீர்கள். பொறுப்புக்கள் அதிகமானாலும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம் :** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு முயற்சியின் பெயரில் பதவி உயர்வு ஏற்படலாம். அலுவலகத்தில் வர வேண்டிய பண வரவுகள் கைகளுக்கு வந்து சேரும்.

**கும்பம் :** பழைய பொருட்கள் சிலவற்றை மாற்றி புதியவற்றை வாங்குவீர்கள். உறவினர் தொடர்பான விஷயங்களுக்காக பயணம் செய்ய நேரிடும்.

**மீனம் :** எதிர்பார்க்கும் கடன் வரவுகள் தள்ளிப் போகலாம். சொந்த தொழில் செய்பவர்கள் அதிக வேலைப்பழுவால் அல்லல் பட நேரலாம்.

## விவசாயிகளின் ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அதற்காக வெண்டர்சன் குளம் தொடக்கம் புலியுத்துகுளம் வரையான ஒன்பது ஏரிகளுக்கும் நீர் அனுப்பக்கூடிய வகையில் கால்வாய் அமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு போதிய நீரைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் விவசாய செயற்பாடுகளை மையப்படுத்தி அதனை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் உறுதியளித்தார். அத்துடன், தம்பலகாமம் பிரதேசச் செயலகப் பிரிவுக்குட்பட்ட 94 ஆவது பிரிவு முதல் பாலம் வரையான யானை வேலி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் வரையில் வீதி விளக்குகளை பொருத்துமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

விவசாயக் குடும்பங்களுக்கு இலவச காணி உறுதி பத்திரம் வழங்குதல், விவசாயப் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இளம் விவசாயத் தொழில் முனைவோருக்கு காணிகளை வழங்குதல், பால் உற்பத்தியாளர்களுக்கு மேய்ச்சல் நிலத்துக்குப் போதுமான காணிகளை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அது தொடர்பிலான கோரிக்கைகளுக்கான தீர்வுகளை விரைந்து வழங்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்துக்கு மேலதிகமாக, இந்தியாவிலிருந்து குழாய் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் திட்டமும் உள்ளது. சுற்றுலா மட்டுமின்றி, வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி முதலீட்டு வலயங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தை கிழக்கின் பிரதான துறைமுகமாக அபிவிருத்தி செய்து அதன் ஊடாக தென்னிந்தியாவின் உற்பத்திகளை பரிமாறிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டங்கள் திருகோணமலை மாவட்டத்தில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தும். திருகோண மலை மாவட்டத்தில் விவசாய தொழில், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி கைத்தொழில் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கிறோம். இப்பகுதியில் விவசாயத் தொழிலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த யோசனையைப் பெறவே இன்று இங்கு வந்தோம். இது தொடர்பாக நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி அறிந்து கொண்டேன். இது தொடர்பான அறிக்கைகளை வழங்குமாறு ஆளுநருக்கும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளேன். இந்த அபிவிருத்தித் திட்டப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம். விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டும். போட்டித்தன்மை மிக்க விவசாயத் தொழில் துறையை உருவாக்க வேண்டும். சிறிய குளங்களை புனரமைத்து, அவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

மேலும், பயிர்ச்செய்கை மற்றும் அறுவடைக் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் விவசாய நிலையங்களை விவசாய நவீனமயமாக்கல் மத்தியஸ்தானங்களாக கட்டமைக்க வேண்டும். அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு விவசாய சேவை நிலையம் என்ற அடிப்படையில் 25 நிலைய ங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கான ஆதரவை அமெரிக்காவின் பில் மெலிண்டா கேட்ஸ் மன்றமும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை இந்தியாவும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்கால இளைஞர்கள் சமூகம் 'ஸ்மார்ட் அக்ரிகல்சரில்' மீதே ஆர்வம் காட்டுகின்றனர். இரண்டு ஏக்கர் காணியை வழங்குவதால் மாத்திரம் விவசாயத்தில் ஈடுபடமாட்டர்கள். எனவே, புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய 'ஸ்மார்ட் அக்ரிகல்ச்சர்' மூலம் அவர்களை அணுக வேண்டும்.

முன்னைய காலத்தைப் போல் நாட்டிலிருந்து பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நிலையை அடைய வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர் நாம் ஏற்றுமதியில் போதிய கவனம் செலுத்தவில்லை. இப்போது நாம் அதை ஆரம்பிக்க வேண்டும். இந்த நாட்டின் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும். நன்னீர் மீன்பிடி மற்றும் சுற்றுலா வியாபாரம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இலவச காணி உறுதிப்பத்திரம் வழங்கும் 'உறுமய' திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். இது மூன்று பகுதிகளாக செயல்படுகிறது. அதன்படி, இந்த வருடம் பிரச்சினைகள் அற்ற வகையில் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டிருக்கு, சுவர்ண பூமி, ஜயபூமி காணி உறுதிபத்திர உரிமையாளர்களுக்கு முதலில் இலவச காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படும். இதற்கிடையில், அளவீடு செய்யப்படாத காணிகளை அளவிடும் பணியும் முன்னெடுக்கப்படும். காணி பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்கவும் எதிர்பார்கிறோம். அதன்படி ஒரு பிரதேச செயலகத்தில் நாளாந்தம் 500– 1000 காணி உறுதிப் பத்திரங்களை குறைந்த பட்சமாக பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருக்கிறோம்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## திட்டமிட்ட படுகொலைகளை...

அண்மைக் காலங்களில் திட்டமிடப்பட்ட குற்றவாளிகளால் இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்றுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

இவர்களுக்கிடையிலேயே இடம்பெறும் மோதல்களின் விளைவாகவே இத்தகைய படுகொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பில் சர்வதேச கீதா மஹோற்சவம் 2024















சர்வதேச கீதா மஹோற்சவம் 2024 இன் இரண்டாம் நாள் மாலை நிகழ்வு (02) கொழும்பு தாமரை தடாகத்தில் (நெலும் பொக்குண) குருக்ஷேத்ரா மேம்பாட்டு வாரியம், இந்தியா ஹரியானா அரசு, புத்தசாசனம் மத மற்றும் கலாசார விவகார அமைச்சு, கொழும்பு சுவாமி விவேகானந்தர் கலாசார மையம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் பங்கேற்புடன் குருக்ஷேத்ரா அபிவிருத்தி சபை செயலாளர் விகாஸ் குப்தா தலைமையில் நடபெற்றது. நிகழ்வில். குருக்ஷேத்ரா அபிவிருத்தி சபை செயலாளர் விகாஸ் குப்தா மற்றும் டாக்டர் வைஷாலி ஷர்மா ஆகியோர் கலந்து கொண்ட அதிதிகளான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, கீதா மனிஷி சுவாமி ஞானந்த் ஜி, சுவாமி குருசரணந்த் ஜி மகராஜ் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு குருக்ஷேத்ரா சிலை வழங்கி கௌரவிப்பதையும் கலந்து கொண்டோரையும் நடன நிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ்.எம். சுரேந்திரன்)



## வெலிகம ஹப்ஸா அறுபுக்கல்லூரியில் திடீர் தீ; உயிர் சேதம் எதுவுமில்லை

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம ஹப்ஸா மகளிர் அறபுக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் திடீரென ஏற்பட்ட பாரிய தீ விபத்தினால் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது. மூன்று மாடிகளைக் கொண்ட இக் கட்டடத்தின் இரண்டாம், மூன்றாம் மாடிகளே தீப்பற்றிக் கொண்டன.

ஊர் மக்களின் உதவியுடன் மாணவிகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு, தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டதுடன் தீயணைக்கும் படையும் வரவழைக்கப்பட்டன. மாணவிகளுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. கட்டடத்துக்கும் மாணவிகளின் பொருட்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டன. சேதம் பற்றிய மதிப்பீடு இன்னும் கணக்கிடப்படவில்லையென்றும் தீ விபத்துக்கான காரணமும் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.


**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

1. பின்வரும் பெறுகைக்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறைக்கு (NCB) அமைய இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் கனிஷ்ட பெறுகைக் குழு (mPC-A), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| குறிப்பு அடையாள இலக்கம் | பெறுகை பெயர் | விலைமனு பிணை தொகை (இ.ரூபா) | வெட் உட்பட ஆவணக் கட்டணம் (இ.ரூபா) | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/04/PT/2023 / MA/17-01 | Tender for Service and Calibration of Both Fuel Injection Pumps and Governor Units of Both Main Engines of M/T Dheera. | 45,000.00 | 1,000.00 | 2024.03.21 14.00 மணி |
| EW/04/PT/2024 / MA/01-1 | Tender for Service, Calibration, Installation & Commission 2 Nos. of Regulateurs Europa Governor Units of Wartsila 8L26 STBD Main Engine of M/T Nandimithra. | 60,000.00 | 1,000.00 | 2024.03.26 14.00 மணி |

2. கூறுவிலைகளின் மொத்த செலவு 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்படும்போது 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் என்பதை விலைமனுதாரர்களுக்கு இங்கு அறியத்தரப்படுகிறது. அதன்படி, மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கூறுவிலையுடனும் தொடர்புபட்ட அனைத்துத் தரப்புகளும் ஒப்பந்தக் காலம் முழுவதும் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுவது அவசியமாகும். மேலும், முகவர், உப ஒப்பந்ததாரர், பிரதிநிதி அல்லது எந்த ஒரு வெளிநாட்டு ஒப்பந்ததாரரின் சார்பிலான பரிந்துரையாளர் அல்லது ஒப்பந்ததாரர் ஒருவராக செயற்படுவதற்கு விரும்பும் எந்த ஒரு விலைமனுதாரரும் பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் தம்மை பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு தமது விலைமனு ஆவணங்களுடன் (PCA 03 படிவம்) சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேல் தரப்பட்டுள்ள இதனையொத்த சேவைகளை வழங்கியதில் குறைந்தது கடந்த மூன்று (3) ஆண்டுகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தலைமை பொறியியலாளர் (கடல்சார்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விலைமனு மூடப்படும் திகதிக்கு முந்தைய தினம் வரை 10.00 - 16.00 மணிக்கு இடையே வேலை நாட்களில் கீழ் தரப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
5. இறுதித் திகதிக்கு முந்தைய தினம் வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2024 மார்ச் 05 ஆம் திகதியில் இருந்து அட்டவணையின் 4 ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
6. விலைமனுக்களை இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்களை ஏற்கும் இறுதி நேரத்தில் கீழுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விலைமனுதாரர்களால் தேர்வு செய்யப்படும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு பிணையின் தொகையை கொண்டிருத்தல் வேண்டும்.

**தலைவர் பொறியியலாளர் (கடல்சார்)**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**
**இல. 45, லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01.**
**தொ. இல.: 0094112482330, தொலைநகல் இல.: 0094112342537**



**— பிழை திருத்தம் —**

**மூடப்படும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்**

சுகாதார அமைச்சு

SPMC

இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPMC) இற்கு

**CHILLER SYSTEM INCLUDING PIPING AND BUILDING AUTOMATION WITH BILLING SYSTEM ஐ வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், இயக்குதலுக்கான விலைமனு அழைப்பு**

**ஒப்பந்த இலக்கம் - SPMC/MM/04/2024**

மேற்படி தலைப்பில் கடந்த 2024.02.25ம் திகதி தினகரன் வாரமஞ்சரி 19ம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின முதலிரண்டு பந்திகள் பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

2024 மார்ச் 04ம் திகதி 10.00 மணிக்கு மூடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மேற்படி பெறுகைக்கான மூடப்படும் திகதியானது,

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் சார்பாக பெறுகைக் குழுவினால் இப்பெறுகையின் மூடப்படும் திகதி 2024 மார்ச் 18 ஆம் திகதி 14.00 மணி வரை பிற்போடப்படுகிறது.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,**
**இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை.**
**தொலைபேசி : 2635353/2637574/2623298**
**பெக்ஸ் : 2634771/2626621**
**இணையதளம் : www.spmc.gov.lk**



## பிரசித்த ஏல விற்பனை

29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023, 29ம், 30ம் ஜனவரி 2024, 26ம், 27ம் பிப்ரவரி 2024 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல், ரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 25 மார்ச் 2024 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2024.03.03

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5408
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,258,248.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 5 3 2 7 8 3

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3650
சீட்டிழுப்பு திகதி 2024.03.03
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,630,947.36
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 05 16 31 47
விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 05603

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1756
2024.03.03
71634
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.426,179,810.00
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 26 36 55 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 0234
ஆங்கில எழுத்து N
L7 எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 8 3 3 6 9 4
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.26,151,029.60

**ராசி சுப பலன்**
திகதி 2024.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 717
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,103,794.40
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 09 12 16 22
தனயோக இலக்கம் 57143
நாளுக்கான விதி எண் 11

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1438
2024.03.03
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,430,564.64
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 09 37 39 69
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46999

# களுவன்கேணி, வந்தாறுமூலை உள்ளக வீதிகள் புனரமைப்பு



களுவன்கேணி பாடசாலை மைதான வீதி, மற்றும் வந்தாறுமூலை உள்ளக வீதி போன்றன செப்பனிடப்பட்டு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனினால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்டம் பூராகவும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் வீதிகளை இனம் கண்டு அவற்றை செப்பனிட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் 1.3 கிலோமீற்றர் நீளமான களுவன்கேணி பாடசாலை மைதான வீதி காபட் வீதியாகவும், 160மீற்றர் நீளமான வந்தாறுமூலை உள்ளக வீதி கொங்கிறீட் வீதியாகவும் செப்பனிட்டு சம்பிரதாய பூர்வமாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்திருந்ததோடு இவ்வீதிகளை சம்பிரதாயபூர்வமாக மக்கள் பாவனைக்கு கையளித்தனர்.

இதன்போது களுவன்கேணி ஸ்ரீ முருகன் ஆலய பிரதமகுரு நிமல்ராஜ் சர்மா, வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி ஏ.லிங்கேஸ்வரன், களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய அதிபர் விராத்தனன், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சுற்றுலாப் பயணிகளுக்காக புறாமலை திறந்துவைப்பு






பருவகால ஆரம்பத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சுற்றுலாப் பயணிகளுக்காக புறாமலை (Pigeon Island) நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக உலக வனஜீவராசிகள் தினமான நேற்று ஆளுநரால் உத்தியோகபூர்வமாக புறாமலை (Pigeon Island) திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், நிலாவெளி சுற்றுலா அபிவிருத்தி குழு, திருகோணமலை ஹோட்டல் சங்கம் மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றின் அனுசரணையில் நடைபெற்றதுடன்

இந்நிகழ்வில் சுற்றுலா பணியகத் தவிசாளர் மதன், வனவிலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட புலமைசார் செயலமர்வு

**(கல்முனை விசேட நிருபர்)**





இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடம் ஏற்பாடு செய்திருந்த முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இச்செயலமர்வில் பெண்களின் திருமண வயதெல்லை, திருமணத்திற்கான பெண்ணின் சம்மதம், காதிகளின் தகைமை, பெண்காதிகள் நியமனம், திருமணப் பதிவு, தாபரிப்பு மற்றும் பலதார மணம் போன்ற முக்கிய விடயப்பரப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும், பீடாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட 'இலங்கையில் முஸ்லிம் விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பு குறித்த முஸ்லிம் சமூகத்தின் கருத்துநிலை' எனும் ஆய்வின் முடிவுகளும் இச்செயலமர்வில் முன்வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களான பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர், பேராசிரியர் கலாநிதி ஆர்.ஏ. சர்ஜூன், கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ், கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி மற்றும் உஸ்தாத் மன்ஸூர், கலாநிதி ஷாமிலா தாவூத், கலாநிதி ஷிஹான் தாவூத், டாக்டர் வை.எல்.எம்.யூஸூப், எம்.எம்.எம். சாபிர், கலாநிதி எம்.பீ. பௌஸூல், கலாநிதி யூ.எல். அஸ்லம் ஆகியோருடன் சட்ட அறிஞர்களான கலாநிதி ஏ.எல்.கபூர், எம்.எச்.எம். றுஸ்தி, எம்.ஏ.சீ.எம். உவைஸ், ஏ.சீ.எப். ஹூஸ்னா, அஷ்ஷெய்ஹ் டீ.எம்.எம். அன்ஸார், ஜெ. றாஷி முஹம்மத் போன்றோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற முஸ்லிம் அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள், முஸ்லிம் சிவில் சமூகத் தலைவர்கள், பெண் ஆர்வலர்கள், துறைசார் நிபுணர்கள் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் பார்வையாளர்கள் தங்களின் சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.



சம்மாந்துறை விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் சர்வேஸ்வரன் குகதர்சனா கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் பத்தாமிடத்தைப் பெற்றுள்ளார். இவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் கே.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். (படம்: மணல்சேனை நிருபர்)

# நீதிமன்ற தீர்ப்பின்படி பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து என்னால் செயற்பட முடியும்

**(ஒலுவில் விசேட நிருபர்)**



உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து செயற்படுவேன் என, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.எம். முஷாரப் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து இயங்க முடியுமென உச்ச நீதிமன்றத்தினால் எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியாகும். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினால் சட்டத்திற்கு முரணாக எடுத்த முடிவினால் இந்த வழக்கு எனக்கு ஒரு பெரும் சவாலாக இருந்தது. தற்போது நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. இத்தீர்ப்பானது நாட்டின் சட்டவாச்சி மற்றும் நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது என்பதை பார்க்கின்றேன்.

இந்த தீர்ப்புக்காக கடந்த ஒரு வருடமாக காத்திருந்தேன், இதற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் என்னால் சரியான முறையில் பயணிக்க முடியாமல் போனது மட்டுமல்லாது பெரும் மன உளைச்சலுக்கும் ஆளானேன்.

நான் தேர்தல் காலங்களில் நேர்மையான முறையில் எனது பிரசாரங்களை முன்கொண்டு சென்றதனால் மக்கள் எனக்கு ஆணை வழங்கியிருந்தார்கள. எனது அரசியல் காலத்திற்குள் ஊழல் அற்ற அரசியலை மக்கள் முன் கொண்டு சென்றுள்ளேன்.

எதிர்காலத்தில் இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் மீள் பரிசீலனை செய்ய முடியும்.

எனது பிரதேசத்திற்கு மாத்திரமின்றி முழு அம்பாறை மாவட்டத்திற்கும் என்னால் முடிந்த பணிகளை நேர்மையாக முன்னெடுத்துள்ளேன் என்றார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.எம். முஷாரபுக்கு எதிராக நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கட்சியின் யாப்புக்கு எதிராகவும் அதன் தீர்மானங்களுக்கு எதிராகவும் பாராளுமன்ற உறுப்பினர் செயற்பட்டார் என்று தெரிவித்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்துவோம்

## மட்டக்களப்பில் அஞ்சல் ஓட்டப் போட்டி

**(கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)**



சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் அஞ்சல் ஓட்டப்போட்டி அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் ஏற்பாட்டில் கழகத்தின் தலைவர் வீ.ஈஸ்பரன் தலைமையில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களிலிருந்து 18 பாடசாலைகளைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் அஞ்சலோட்ட வீரர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

4x100 அஞ்சலோட்ட போட்டியானது பாடசாலை மாணவர்களுக்கிடையில் நான்கு பிரிவுகளாகவும், கழகங்களுக்கு இடையில் திறந்த மட்ட போட்டியாகவும் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்ஷனி ஸ்ரீகாந்த் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிப் பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிவைத்துள்ளார். இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வீ.லவகுமார், செரி நிறுவனத்தின் இலங்கைக்கான தேசிய இயக்குனர் தர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஏ.ஆர்.எம் ஜிப்ரியின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

**(பாலமுனை தினகரன் நிருபர்)**

மறைந்த ஒலி ஒளிபரப்பாளரும் கல்வியலாளருமான மர்ஹூம் ஏ.ஆர்.எம் ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வு சாய்ந்தமருது பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை (03) நடைபெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஒலி,ஒளிபரப்பாளர் யூ. எல். யாகூப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏ.ஆர்.எம் ஜிப்ரி 'ஒரு சகாப்தம்' என்னும் நூல் அறிமுக விழா நடைபெற்றது.

சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீத் முன்னிலையில் முதன்மை அதிதிகளாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மூதூரில் ரமழான் வரவேற்பு நிகழ்வு

**(மூதூர் தினகரன் நிருபர்)**

புனித ரமழானை முன்னிட்டு மூதூர் புர்க்கானியா பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட 'ரமழானை வரவேற்போம்' எனும் தலைப்பிலான மாபெரும் மக்கள் ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் மூதூர் புர்க்கானியா பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது.

ஐப்பெரும் கடமைகளில் ஒன்றான புனித ரமழானை பிரதேசமக்கள் ஒருமாத காலம் நோன்பிருந்து தமது கடமையை நிறைவேற்றி அதன் சிறப்புக்களையும், நன்மைகளையும் அடைந்து கொள்ள மக்கள் செய்ய வேண்டியவை பற்றி இம்மாநாட்டில் சிறப்பு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் நத்வதுல் உலமா அரபுக்கல்லூரி அதிபர் அஷ்ஷேஹ். எம்.எம்.கரீம் நத்வி, அஷ்ஷேஹ் எம்.என்.எம். ஹாரீஸ் நத்வி உள்ளிட்ட மார்க்க அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

# நிந்தவூரில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலன்புரி அமைப்பு ஆரம்பித்துவைப்பு

**(நிந்தவூர் குறூப் நிருபர்)**



நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி, அவர்களுக்கான நலன்புரி அமைப்பு அண்மையில் நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்மா பள்ளிவாசலில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பள்ளிவாசலின் பிரதம இமாமும், அல் பஷாயிர் சமூக சேவை அமைப்பின் செயலாளருமான மௌலவி ஏ.பி.எம். ஷிம்லியின் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

நிந்தவூர் பிரதேசத்தில் 20 மாற்றுத்திறனாளிகளை ஒன்றிணைத்து அல்பஷாயிர் சமூக சேவை அமைப்பின் கீழ் இவர்களுக்கான நலன்புரி அமைப்பானது ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## கந்தளாய் வான்எல குளத்தில்

# யானைகளை பார்வையிட படையெடுக்கும் மக்கள்

**(கிண்ணியா மத்திய நிருபர்)**



திருகோணமலை கந்தளாய் வான்எல குளத்தில் கூட்டம் கூட்டமாக காட்டு யானைகள் அலைந்து திரியும் காட்சியை கடந்த சில நாட்களாக காணக்கூடியதாகவுள்ளது.

குளத்தின் கிழக்கு பகுதியிலிருந்து ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் யானைகள் குளத்தை நோக்கி வருவதும், அங்கு சாகச விளையாட்டுகளில், அவை ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இது ஒரு பொழுதுபோக்கு அளிக்கும் நிகழ்வாக இருப்பதால், மக்கள் இதனை கண்டுகளிப்பதற்கு, நாளாந்தம் இப்பிரதேசத்துக்கு மாலை வேளைகளில் சென்று வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வயோதிபர்கள் என வயது வித்தியாசமின்றி, தூர இடங்களிலிருந்து, இக்காட்சியை கண்டுகளிப்பதற்கு வருகை தருவது மாத்திரமன்றி, புகைப்படம் எடுத்து மகிழ்ந்தும் வருகின்றனர்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி பங்களிப்பின் கீழ் British Council மற்றும் Search for common ground என்பனவற்றின் நடைமுறைப்படுத்தலின் கீழ் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் என்ற தலைப்பில் செயலமர்வொன்று அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது. (படம்: தம்பலகாமம் குறூப் நிருபர்)

# அபிமானத்துடன் வெள்ளிவிழா காணும் குருவிட்ட ஸாஹிரா மகா வித்தியாலயம் (1996-2021)

**இந்து சமுத்திர முத்தினில், இலங்கை என்ற தீவினில், இரத்தினம் விளையும் எங்கள் இரத்தினபுரி அழகிய மண்ணில், குருவிட்ட என்ற பிரதேசத்தில் 1996ஆம் ஆண்டு முளைவிட்ட ஓர் விருட்சமாக திகழும் இர/ ஸாஹிரா மகா வித்தியாலயமானது இன்றைய தினம் (05) தனது 25ஆம் ஆண்டு வெள்ளி விழாவினை மிகவும் கோலாகலமாக கொண்டாடுகிறது.**

குருவிட்ட பிரதேசத்தில் முஸ்லிம் மற்றும் தமிழ் மாணவர்களுக்கு காலா காலமாக தொடரும் தமிழ் மொழி மூலமான தனி ஒரு பாடசாலை இல்லை என்ற குறைபாட்டினை நிவர்த்திக்கும் முகமாக இர/ஹிக்கஸ்வத்த கனிஷ்ட வித்தியாலயத்தில் இருந்து தமிழ் மொழி மூலமான ஒரு பாடசாலையை உருவாக்க வேண்டுமென்ற நோக்கோடு இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த நாலந்த எல்லாவெல அவர்களின் தலைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் (01.01.1996) ஆம் ஆண்டு இர/குருவிட்ட முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்டதே இப்பாடசாலையாகும்.



மாணவ தலைவர்கள்

இப்பாடசாலையின் உருவாக்கத்தில் இன்னும் பல நல்லுள்ளம் படைத்தோரின் பங்களிப்பு கிடைத்துள்ளமையையும் இந்நந்நாளில் ஞாபகப்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.



மாணவ தலைவிகள்

குருவிட்ட பிரதேசத் தோற்றுவாய்க்கு 46 மாணவர்களுடனும், 3 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை வரலாற்றில் முதல் அதிபர் என்ற பெருமையை ஓ. எம். நஜிமுதீன் பெற்றுக்கொண்டார்.

1999ஆம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபராக எம். எம். தாவூஸ் கடமையேற்றதோடு 6ஆம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் அதிபர் எம். எம். தாவூஸ் இடமாற்றம் பெற்றுச் சென்றதால் 1998ஆம் ஆண்டு எமது பாடசாலையின் அதிபராக எஸ். எம் எஸ். நஸார் அதிபராக கடமையேற்றார். இவரது கடமைக்காலத்தில் 1999ஆம் ஆண்டு 8ஆம் வகுப்பும், 2000ஆம் ஆண்டு 9ஆம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு சித்திலெப்பை மண்டபத்தின் இரண்டாம் மாடி அமைக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு அதிபர் ஸீ. எம். காஸிம் பாடசாலையின் அதிபராக கடமையேற்றார். இவரது கடமைக்காலத்தைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டு அதிபர் எம். ஏ. எம். அக்ரம் அதிபராக பதவியேற்றார். இவரது பதவிக்காலத்தில் எமது பாடசாலை துரித வளர்ச்சி காணத்தொடங்கியது.

2004ஆம் ஆண்டு சித்தி லெப்பை மண்டபத்தின் மூன்றாம் மாடி அமைக்கப்பட்டது. அத்தோடு 2005ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு மற்றும் க.பொ.த (சா/தர) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் குருவிட்ட முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயரில் அழைக்கப்பட்ட எமது பாடசாலை குருவிட்ட ஸாஹிரா வித்தியாலயம் என புதிய நாமம் பெற்றது .

2006ஆம் ஆண்டு முதல் தடவையாக எமது பாடசாலை மாணவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்கைக்கு தோற்றி 80% சித்தியைப் பெற்று இரத்தினபுரி மாவட்டத்தில் முன்னணி பாடசாலையாக திகழ்ந்தது. இவ்வெற்றி இறையருளாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் உதவியாளும், அதிபர் எம். ஏ. எம். அக்ரம் அவர்களின் தலைமையின் கீழ் ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் கிடைத்த பொன்னான வெற்றி என்றே இதனை கூற வேண்டும்.

2007ஆம் ஆண்டு அப்துல் அஸீஸ் மண்டபத்தின் கீழ் மாடி அமைக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு க.பொ.த (உ/தர) கலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் பெயர் "இர/ ஸாஹிரா மஹா வித்தியாலயம்" என்று மாற்றம் செய்யப்பட்டது. இது எமது பாடசாலை வெற்றியின் முக்கிய திருப்பு முனையாகும். அத்தோடு 2013ஆம் ஆண்டு பாடசாலையின் முன்பக்க மதில் நுழைவாயில் அமைக்கப்பட்டதுடன் அதிபர் விடுதி வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு அப்துல் அஸீஸ் மண்டபத்தின் இரண்டாம் மாடி அமைக்கப்பட்டதுடன் புதிய அதிபர் காரியாலயம் அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டே மாணவர்களுக்கு தூய நீரை வழங்கவென குழாய்க்கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டது. மேலும் இவ்வாண்டில் க.பொ.த (உ/தர) கலைப்பிரிவு மாணவர்கள் முதல் தடவையாக பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்தனர்.

2016ஆம் ஆண்டு பாடசாலையில் தொழுகையறையொன்று அமைக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு அதிபர் எம். ஏ. எம். அக்ரம் தனது சேவைக் காலத்தை பொற் காலமாக்கி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றார். இவரது சேவையைத் தொடர்ந்து எமது பாடசாலையில் பிரதி அதிபராக இருந்த எம்.எப்.எம். இமாம் (இஹ்ஷானி) அதிபராக பதவியேற்றார்.

இவ்வாண்டிலே எமது பாடசாலை "அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டது.

எமது பாடசாலை படிப்படியான வளர்ச்சியைக் கண்டு வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். 2016ஆம் ஆண்டு மலசல கூடம் புனர்நிர்மாணம் செய்யப்படல், 2017ஆம் ஆண்டு அச்சு இயந்திரம் பெறல், 2016/2017 ஆம் ஆண்டுகளில் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற "பயன்மிகு பாடசாலை" போட்டியில் கலந்துகொண்டு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டமை என்பவற்றை குறிப்பிடலாம்.

2018ஆம் ஆண்டில் பல்லூடக திட்டம் (projector) ஒன்று பெற்றுக்கொண்டமை, வாசிகசாலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டமை, பாடசாலையின் பின்பக்க மதில் பூரணப்படுத்தப்பட்டமை என்பன குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2018/2019 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சும், AAT கணக்காய்வு நிலையமும் இணைந்து நடத்திய அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற கணக்காய்வு போட்டியில் இரு தடவைகளிலும் வெள்ளிப் பதக்கத்தை எமது பாடசாலை சுவீகரித்துக்கொண்டது.

2020ஆம் ஆண்டு தஸ்மினா நிறுவனத்தினால் அதிபர் விடுதிக்கான குழாய் கிணறும், கணினி அறையும் புனர்நிர்மாணம் செய்து தரப்பட்டது.

2021ஆம் ஆண்டு அப்துல் அஸீஸ் மண்டபத்தில் மூன்றாம் மாடி அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2022ஆம் ஆண்டு நவீன கற்பித்தல் அறைக்கு திறன்பலகை (smart board) பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், fiber internet வசதியும் பெறப்பட்டது. அதிபர் எம்.கே.எப். எம். இமாம் அவர்களின் பதவி ஏற்பைத் தொடர்ந்து மாணவர்களின் பெறுபேறுகளில் பாரிய வெற்றியை காண அயராது உழைத்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்தவகையில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக க.பொ.த (உ/தர) பரீட்சையில் 100% சித்திகளைப்பெற முடிந்தது.

க.பொ.த (சா/தர) பரீட்சையில் 93% சித்திகளையும்பெற முடிந்தது. இர/ஸாஹிரா மகா வித்தியாலயம் க.பொ.த (உ/தர) மற்றும் (சா/தர) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று குருவிட்ட கல்விக்கோட்டத்தில் முதலிடத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கின்றமை எமது பாடசாலையின் அசைக்க முடியாத சாதனையாகும்.



எம்.கே.எப்.எம். இமாம் (இஹ்ஸானி) பீ.ஏ
(பாடசாலை அதிபர்)



பிரதி அதிபர்

எமது பாடசாலையின் ஒவ்வொரு மாணவனும் ஏதோ ஒரு இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் கல்வியின் மூலம் பயன்பெறும் முழுமையான நிலையை அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது பாடசாலை மாணவர்கள் கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் தமது திறமையினூடாக முன்னேறிச் செல்வதை குறிப்பிட்டுக்காட்டலாம். மேலும் எத்துறை சார்ந்ததாயினும் எமது மாணவர்கள் தொழிற்தகைமைகளைப் பெற்று சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் வெள்ளி விழாக்காணும் எமது பாடசாலை இவ்வருடத்தில் பாடசாலை அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், தனவந்தர்கள், பழைய மாணவர்கள் என பலரதும் ஒத்துழைப்புடன் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

❖ பாடசாலையிலுள்ள அனைத்து கட்டடங்கள் மற்றும் மதில்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, நிறப்பூச்சிடப்பட்டு அழகு படுத்தப்பட்டது.

❖ பல இலட்சம் செலவில் கணினி அறை நவீன வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டது.

❖ மாணவர்களுக்கான நவீன மயப்படுத்தப்பட்ட ( Smart Class Room) வகுப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

❖ வாசிகசாலைக்கான மேலதிக உபகரணங்கள் பெறப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டன.

❖ பிரதான மண்டபம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

❖ பல இலட்சம் செலவில் பாடசாலைக்குத் தேவையான Sound System பெறப்பட்டு அனைத்து கட்டிடங்களுக்கும் பொருத்தப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டன.

❖ பாடசாலைக்குள் பாதுகாப்பு கருதி பாடசாலையின் வளாகத்திற்குள் (CCTV Cameras) பொருத்தப்பட்டுள்ளது.



பாடசாலை முகப்புத்தோற்றம்

❖ பாடசாலையின் சுற்றுப்புறச் சூழல் அலங்காரம் செய்யப்பட்டு முன்பக்க முற்றத்தினை கற்கள் பதித்து அலங்கரிக்கப்பட்டன.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரியிடம் (கொள்முதல்) மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 11 2 584 184** கைத்தொலைபேசி : **+94 77 0 103 359**, தொலைநகல் :**+94 11 2500674**, (மின்னஞ்சல்: **sapumal@lscl.lk**).

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.**

SELACINE

---

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**மத்திய நெடுஞ்சாலை செயற்றிட்டம் பாகம்-3**

[**பொத்துஹரவிலிருந்து கலகெதர வரையும்** (CH 0+000 KM TO CH 32+450 KM)]

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் நிருணயிக்கப்பட்டுள்ள நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தகைமை தகவுத்திறன் ஆகியவற்றின் கீழ் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டுள்ள உள்ளூர் விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையில் தனித்தனியாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது (தொழில் வழங்குநர்) இப்போது அழைக்கின்றது.

| விஅ இல. | ஒப்பந்தத் தலைப்பு | CIDA தரம் மற்றும் விஷேடத்துவம் | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள பெறுமதி (மில்லியன் இலங்கை ரூபாவில் - அண்ணளவாக) | தகைமை தகவுத்திறன் (சித்தி/ சித்தியின்மை அடிப்படையில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | (i) வருடாந்த சராசரி நிருமாண நிதிப்புரள்வு (ii) நிதிசார் வளங்கள் | கடந்த 8 வருடங்களில் சித்திகரமாக அல்லது கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்ட செயற்றிட்ட அனுபவம் |
| RDA/CEP/3/ PACK 1 R | மத்திய நெடுஞ்சாலை செயற்றிட்ட பாகம் 3 [from Pothuhera to Galagedara (from CH 0+000km to CH 32+450km) Construction of Package 1 R (Ch 0 +100 km to Ch 0+840km)] | பாலம் - அல்லது நெடுஞ் சாலையில் சிஎஸ் 1 மற்றும் மேற்பட்டது | 2965.6 | (i) வசநிநி 3900 மில்லியன் இ.ரூபாவில் கடந்த 8 வருடங்களில் (ii) நிவ-1400 மில் இ.ரூபாவில் | (i)ஆகக் குறைந்தது 10 கி.மீ. 2 வரிசை நெடுஞ்சாலை/அதிவேக நெடுஞ்சாலை 1 ஒப்பந்தம் (ii) பெறுமதி 2300 மில். இ.ரூபாவில் |
| RDA/CEP/3/ PACK 1 S | மத்திய நெடுஞ்சாலை செயற்றிட்ட பாகம் 3 [from Pothuhera to Galagedara (from CH 0+000km to CH 32+450km) Construction of Package 1 S(Ch 12 +890 km to Ch 13+800km)] | பாலம் - அல்லது நெடுஞ் சாலையில் சிஎஸ் 2 மற்றும் மேற்பட்டது | 6608.4 | (i)வசநிநி 3900 மில்லியன் இ.ரூபாவில் கடந்த 8 வருடங்களில் (ii) நிவ-1400 மில் இ.ரூபாவில் | (i)ஆகக் குறைந்தது 10 கி.மீ. 2 வரிசை நெடுஞ்சாலை/அதிவேக நெடுஞ்சாலை 1 ஒப்பந்தம் (ii) பெறுமதி 5200 மில். இ.ரூபாவில் |

2. மேலேயுள்ள தகைமை தகவுத்திறனுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு ஒப்பந்தப் பொதிக்கும் பின்வரும் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ) 2019 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து செயற்பட்டிராத ஒப்பந்தத்தின் காட்சிப்படுத்தலை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - ஆ) தேறிய பெறுமானம் 50% மேற்பட்ட தொகைக்கான முடிவுறா வழக்குகள் இருத்தல் ஆகாது.
   - இ) கடந்த மூன்று (3) வருடங்களில் ஏதாவதொன்றில் விலைமனுதாராரின் தேறிய வருமானமானது சாதகமாக இருந்திருத்தல் வேண்டும்.
   - ஈ) உரித்தான விலைமனுக்கோரல் ஆவணங்களில் 2.4.2 பிரிவின் கீழுள்ள 1 ஆம் பாகத்தில் கூறப்பட்டவாறு முக்கிய செயற்பாடுகளில் விலைமனுதாரர் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - உ) விலைமனுக்கோரல் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளவாறான ஏனைய தேவைப்பாடுகளுக்கு விலைமனுதாரர் இணைந்தொழுகல் வேண்டும்.
3. ஒவ்வொரு பொதி ஒப்பந்தத்திற்கான காலமானது 18 மாதங்களாகும். இந்த வேலையானது பின்வரும் முக்கிய செயற்பாடுகளை அடக்குகின்றது. தள சுத்திகரிப்பு, அகழ்தல், அணையின் நிருமாணம் மற்றும் soft ground treatments, Sub-base construction, வடிகாலமைப்பு நிருமாணம் அடங்கலாக (ஏற்புடையதாகும் தன்மையில்) கட்டமைப்புக்களின் நிருமாணம், ஒரு பக்க வீதிகளின் நிருமாணம் மற்றும் மேம்படுத்தல்கள், cross roads & temporary roads to the extent specified in the contract required to construct main trace of Expressway up to top of the Sub-Base level (Base and Asphalt construction not included)
4. மேலதிக தகவலை பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்கும் தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பத்தரமுல்ல, 3 ஆம் மாடி, 1 ஆம் மட்டம், "செத்சிரிபாய", 3 ஆம் பாக செயற்றிட்ட மத்திய நெடுஞ்சாலை செயற்றிட்ட பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். தொலைபேசி: 011 2877 708. தொலைநகல்: 011 2877 708. மின்னியல் அஞ்சல் முகவரி: rdapdcep@gmail.com
5. **2024.03.04** ஆம் திகதியிலிருந்து 2024.03.31 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள 4 இன் கீழுள்ள முகவரியில் சாதாரண வேலை நாட்களில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பொதிக்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.
   - (i) மேலேயுள்ள 4 ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணங்களுக்கான கோரிக்கையை சமர்ப்பித்தல்.
   - (ii) மத்திய நெடுஞ்சாலை செயற்றிட்டம் -3 செயற்றிட்டப் பணிப்பாளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 300,000 இலங்கை ரூபாவை (பெசேவ அடங்கலானது) ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும் அல்லது பத்தரமுல்ல இலங்கை வங்கி கிளையிலுள்ள 7040407 என்ற நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு பணத்தை செலுத்தி பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்ட வரைவொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - (iii) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டமூலத்திற்கமைவாகவும் அதனது அதற்குப் பின்னரான திருத்தங்களை கொண்டுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை சமர்ப்பித்தல்.

     [ மேலேயுள்ள 4 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு மேலேயுள்ள 5(i) & 5(ii) இன் கீழ் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையை செலுத்திய பின்னர், மின்னஞ்சல் வழியாக செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ரொக்கப்பண வைப்புத் துண்டுடன் (ஒப்பந்தப் பெயர் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியன ரொக்கப்பண வைப்புத் துண்டில் குறித்துரைக்கப்படல் வேண்டும்) 5(iii) தேவைப்படுத்தப்பட்டுள்ள சான்றிதழ் ஆகியன சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இலத்திரனியல் பதிப்பிலுள்ள முழுமையான விலைமனுக்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ரொக்கப்பண வைப்புத் துண்டின் மூலப்பிரதி மற்றும் கூறப்பட்டுள்ள சான்றிதழ் ஆகியன விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ரொக்கப்பண வைப்புத் துண்டுகள் மற்றும் இதர ஆவணங்களின் மூலப்பிரதி இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்]
6. விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை 2024.04.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, 7 ஆம் மாடி, 'மகனெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல, என்ற முகவரிக்கு ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத்திலும் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இறுதித் திகதிக்குப் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். (இலத்திரனியல் வழியான விலைமனு திறத்தல் ஏற்புடையதாகவிடத்து, இந்த நடைமுறையானது சமர்ப்பித்தலுக்கு முன்னராக அறிவிக்கப்படும்.)
8. விலைமனுக்கோரல் செயற்பாட்டின் நடத்தை அல்லது விளைவை பொருட்படுத்தாமல் , விலைமனுக்கள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் அனைத்து ஆகுசெலவுகளை அவர்களே பொறுப்பேற்றல் வேண்டுமென்பதுடன் தொழில் வழங்குநர் அவ்வாறான ஆகுசெலவுகளுக்கான பொறுப்பு மற்றும் கடமைப்பாட்டைக் கொண்டிருக்க மாட்டார்.

**தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
பத்தரமுல்ல.**

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2024.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

பிரசித்த நொத்தாரிசு பந்துமதி போதிநாயக்க ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2013.12.06 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 7144, பிரசித்த நொத்தாரிசு நதீஷா தரங்கனி பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.06.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 3350 ஆகியவற்றின் பேரில் கொழும்பு 11, பீப்பல்ஸ் பார்க், UG/52 இல் அமைந்த M/S Chemamadu Book centre இடமிருந்து நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.11.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.12,927,328.76 (பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்தேழு ஆயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய் எழுபத்தாறு சதமும்) அத்துடன் ரூ.10,000,000.00 (பத்து மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து நான்கு தசம் இரண்டு ஐந்து (24.25%) வீதத்தில் 2023.12.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 1ஆவது கடன் மீது 2023.11.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 5,132,014.81 (ஐந்து மில்லியன் நூற்று முப்பத்திரெண்டாயிரத்து பதினான்கு ரூபாய் எண்பத்தொரு சதமும்) அத்துடன் ரூ. 3,327,881.79 (மூன்று மில்லியன் முந்நூற்று இருபத்தேழு ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொரு ரூபாய் எழுபத்தொன்பது சதம்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் இரண்டு ஐந்து (23.25%) வீதத்தில் 2023.12.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2ஆவது கடன் மீது 2023.11.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 561,218.68 (ஐந்நூற்று அறுபத்தோராயிரத்து இருநூற்றுப்பதினெட்டு ரூபாய் அறுபத்தெட்டு சதமும்) அத்துடன் ரூ. 498,316.88 (நானூற்று தொண்ணூற்றெட்டு ஆயிரத்து முந்நூற்றுப்பதினாறு ரூபாய் எண்பத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.11.30 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது கடன் மீது 2023.11.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 4,182,519.13 (நான்கு மில்லியன் நூற்று எண்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்றுப் பத்தொன்பது ரூபாய் பதின்மூன்று சதமும்) அத்துடன் ரூ. 3,604,584.79 (மூன்று மில்லியன் அறுநூற்று நான்காயிரத்து ஐந்நூற்று எண்பத்து நான்கு ரூபாய் எழுபத்தொன்பது சதம்) மீது ஆண்டுக்கு ஆறு தசம் ஒன்பது மூன்று (6.93%) வீதத்தில் 2023.12.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்கூறிய 2013.12.06 திகதியிட்ட ஈட்டு முறி இல. 7144, 2017.06.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 3350 ஆகியவற்றின் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று மீது ரூ. 12,927,328.76 (பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்தேழு ஆயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய் எழுபத்தாறு சதமும்) 1ஆவது கடன் மீது ரூ.5,132,014.81 (ஐந்து மில்லியன் நூற்று முப்பத்திரெண்டாயிரத்து பதினான்கு ரூபாய் எண்பத்தொரு சதமும்) 2ஆவது கடன் மீது ரூ. 561,218.68 (ஐந்நூற்று அறுபத்தோராயிரத்து இருநூற்றுப்பதினெட்டு ரூபாய் அறுபத்தெட்டு சதமும்) 3ஆவது கடன் மீது ரூ. 4,182,519.13 (நான்கு மில்லியன் நூற்று எண்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்றுப் பத்தொன்பது ரூபாய் பதின்மூன்று சதமும்) அத்துடன் 2023.12.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நகரஅலுவலகக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கொழும்பு பதிவுப் பிரிவில் சியனே கோரளை அதிகாரிபற்றுவில் கம்பஹா பிரதேச செயலகப் பிரிவில் (எனினும் மிகவும் சரியானது களனிய பிரதேச செயலகப் பிரிவு) களனிய பிரதேச சபை (தலுகம உப அலுவலகம்) எல்லைகளுள் ஹுனுபிட்டிய 256 B இலக்க கிராம சேவகர் பிரிவில் (எனினும் மிகவும் சரியானது வெலேகொட 256 B) ஹுனுபிட்டியவில் அமைந்த “கமத்தகொடெல்ல” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹக் ஆர். சமரசிங்ஹ தயாரித்த 2007 ஒக்டோபர் 21 மற்றும் 23 திகதியிட்ட அளவை வரைபடம் இல. 5344இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 1, வடக்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ.டி.எஸ். த குணதிலக்க தயாரித்த வரைபடம் இல. 2468 இல் காணித்துண்டு 1உம், கிழக்கில் முன்னர் ஏ.ஜே.சீ. பெரேராவின் காணியும் தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.டீ. பீலிக்ஸ் பெரேரா தயாரித்த வரைபடம் இல. 1343இல் காணித்துண்டு 2 மற்றும் காணித்துண்டு 1Cஉம், மேற்கில் காணித்துண்டு 2 மற்றும் பாதையும் (வரைபடம் இல. 991இல் காணித்துண்டு 9) உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 5344 இன் பிரகாரம் பத்து தசம் ஐந்து ஆறு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.10.56) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மஹர காணிப்பதிவகத்தில் G 20/110இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஹுனுபிட்டியவில் அமைந்த “கமத்தகொடெல்ல” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹக் ஆர். சமரசிங்ஹ தயாரித்த 2007 ஒக்டோபர் 21 மற்றும் 23 திகதியிட்ட அளவை வரைபடம் இல. 5344இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 2, வடக்கில் காணித்துண்டு 1உம், கிழக்கில் காணித்துண்டு 1உம் தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.டீ. பீலிக்ஸ் பெரேரா தயாரித்த வரைபடம் இல. 1343இல் காணித்துண்டு 1C உம், மேற்கில் பாதையும் (வரைபடம் இல. 991இல் காணித்துண்டு 9) உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 5344 இன் பிரகாரம் எட்டு தசம் எட்டு இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.8.82) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மஹர காணிப்பதிவகத்தில் G 20/111 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.டீ.எஸ்.ஆர். பெரேரா தயாரித்த வரைபடம் இல. 991 இல் காணித்துண்டு 9 (பாதையொன்றுக்கான ஒதுக்கம்) மீதான ஏனையோருக்கு உரியதைப் போன்ற வழி உரிமையும் ஆகும்.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி ஆர்.டீ.டீ. ரணசிங்ஹ**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நகர அலுவலகக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2024.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு பந்துமதி போதிநாயக்க ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2013.07.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 7011இன் பேரில் மாலபே, புதிய கண்டி வீதி, இல. 760 எனும் முகவரியில் அமைந்த M/S Cedar Crest பங்காளர்கள் மாலபே, தலங்கம வடக்கு, இல. 829/ஏ எனும் முகவரியைச் சேர்ந்த திரு. விதுர ஓபித பாலசூரிய, மாலபே, தலங்கம வடக்கு, இல. 829/ஏ எனும் முகவரியைச் சேர்ந்த திரு. டொன் டெரன்ஸ் ஷாந்தராஜா பாலசூரிய மற்றும் மாலபே, தலங்கம, வடக்கு, இல. 829/ஏ எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி வினிதா சமரதுங்க ஆகியோரிடமிருந்து நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 28,624,931.50 (இருபத்தெட்டு மில்லியன் அறுநூற்று இருபத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தொரு ரூபாய் ஐம்பது சதமும்) அத்துடன் ரூ. 18,000,000.00 (பதினெட்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து நான்கு தசம் இரண்டு ஐந்து (24.25% வீதத்தில் 2023.12.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 1ஆவது கடன் மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 980,079.19 (தொள்ளாயிரத்து எண்பதாயிரத்து எழுபத்தொன்பது ரூபாய் பத்தொன்பது சதமும்) 2 ஆவது கடன் மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.1,288,328.66

(ஒரு மில்லியன் இரு நூற்று எண்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய் அறுபத்தாறு சதமும்) 3ஆவது கடன் மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 421,167,28 (நானூற்று இருபத்தொரு ஆயிரத்து நூற்று அறுபத்தேழு ரூபாய் இருபத்தெட்டு சதமும்) 4ஆவது கடன் மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 62,617.63 (அறுபத்திரெண்டாயிரத்து அறுநூற்றுப் பதினேழு ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) 5ஆவது கடன் மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 1,602,059.07 (ஒரு மில்லியன் அறு நூற்றிரண்டாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபாய் ஏழு சதமும்) அத்துடன் ரூ. 1,353,925.29 (ஒரு மில்லியன் முந்நூற்று ஐம்பத்து மூன்று ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தைந்து ரூபாய் இருபத்தொன்பது சதம்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.12.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 6ஆவது கடன் மீது 2023.12.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 1,588,631.51 (ஒரு மில்லியன் ஐந்நூற்று எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்று முப்பத்தொரு ரூபாய் ஐம்பத்தொரு சதமும்) அத்துடன் ரூ. 1,392,636.00 (ஒரு மில்லியன் முந்நூற்று தொண்ணூற்றிரண்டாயிரத்து அறுநூற்று முப்பத்தாறு ரூபாய்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.12.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

பிரசித்த நொத்தாரிசு பந்துமதி போதிநாயக்க ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2013.07.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 7011இன் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று மீது ரூ.28,624,931.50 (இருபத்தெட்டு மில்லியன் அறுநூற்று இருபத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தொரு ரூபாய் ஐம்பது சதமும்) 1ஆவது கடன் மீது ரூ. 980,079.19 (தொள்ளாயிரத்து எண்பதாயிரத்து எழுபத்தொன்பது ரூபாய் பத்தொன்பது சதமும்) 2ஆவது கடன் மீது ரூ. 1,288,328.66(ஒரு மில்லியன் இருநூற்று எண்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய் அறுபத்தாறு சதமும்) 3ஆவது கடன் மீது ரூ. 421,167.28 (நானூற்று இருபத்தொரு ஆயிரத்து நூற்று அறுபத்தேழு ரூபாய் இருபத்தெட்டு சதமும் 4ஆவது கடன் மீது ரூ. 62,617.63 (அறுபத்திரெண்டாயிரத்து அறுநூற்றுப் பதினேழு ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) 5ஆவது கடன் மீது ரூ. 1,602,059.07 (ஒரு மில்லியன் அறுநூற்றிரண்டாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபாய் ஏழு சதமும்) 6ஆவது கடன் மீது ரூ. 1,588,631.51 (ஒரு மில்லியன் ஐந்நூற்று எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்று முப்பத்தொரு ரூபாய் ஐம்பத்தொரு சதமும்) 2023.12.06 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நகர அலுவலக மேற்தரக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பல்லேபற்றுவில் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் கடுவெல மாநகர சபை எல்லைகளுள் கடுவெல 477A இலக்க கிராம சேவகர் பிரிவில் தலங்கம வடக்கு கிராமத்தில் அமைந்த கடுவெல வீதி வரிமதிப்பு இலக்கம் 760 மற்றும் 760/1ஐக் கொண்ட “ஹிக்கஹவத்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம்.டபிள்யு. தெபுலன்கொட தயாரித்த 2012 ஒக்டோபர் 2 திகதியிட்ட அளவை வரைபடம் இல. 3817/Aஇல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A1, வடக்கில் கடுவெல வீதியும் (புதிய கண்டிப் பாதை) உம், கிழக்கில் வரைபடம் இல. 2144இல் காணித்துண்டு 3உம் தெற்கில் காணித்துண்டு A2உம், மேற்கில் 20 அடி அகலப் பாதை (உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.எச்.பி. ஜோசப் தயாரித்த வரைபடம் இல. 33/98இல் காணித்துண்டு 1H உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3817/A இன் பிரகாரம் இருபத்தேழு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.27.90) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள் வளர்பவை மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கடுவெல காணிப்பதிவகத்தில் B1604/102 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி. ஆர்.டீ.டீ. ரணசிங்ஹ**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நகர அலுவலகக் கிளை**
**கொழும்பு 01.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பெறுகை அறிவித்தல்

### போதனா வைத்தியசாலை - அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கட்டிடங்கள் பழுதுபார்த்தல் சம்பந்தமாக 05 செயற்றிட்டங்களுக்கு பணிப்பாளர், போதனா வைத்தியசாலையினால் விலைமனுக்கள் கோரப்படுவதுடன், அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்களை இங்கு குறிப்பிடப்படும் QR குறியீட்டை Scan செய்தல் மூலம் அல்லது tha.lk என்ற இணைய தளத்திற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 025 - 2222261 / 62 - 63 இலக்கத்தை அழைத்து 111 நீடிப்பை அழையுங்கள்.

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்கம்**

## சுகாதார அமைச்சு

**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்**

| பெறுகை தலைப்பு | ஒப்பந்த இலக்கம் |
| --- | --- |
| சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் (HSEP) கீழ் சுற்று 02இல் கேகாலை மாவட்ட W6(AF) சிவில் வேலைகளின் பெறுகை - மேலதிக நிதி | HSEP(AF)/PIU(SP)PRO/W6/01/2024 |
| சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் (HSEP) கீழ் சுற்று 02இல் இரத்தினபுரி மாவட்ட W7(AF) சிவில் வேலைகளின் பெறுகை - மேலதிக நிதி | HSEP(AF)/PIU(SP)PRO/W7/01/2024 |

**விலைமனு சமர்ப்பிக்கும் திகதி திருத்தப்பட்டதன் அறிவித்தல்**

இது மேலுள்ள பெறுகைக்காக “விலைமனுக்களுக்கான அழைப்பு” தொடர்பில் 2024 பெப்ரவரி 7 ஆம் திகதி டெய்லி நியுஸ் பத்திரிகையில் வெளியான (18 ஆம் பக்கம்) பத்திரிகை விளம்பரம் சம்பந்தமானது. இதன் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2024 மார்ச் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளதோடு விலைமனு ஆவணங்களை 2024 மார்ச் 14 ஆம் திகதி 15:00 மணி வரை இரத்தினபுரி, தர்மபால மாவத்தை, இல. 75, சப்ரகமுவ திட்ட அமுலாக்கல் பிரிவு அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

**தலைவர்**
**திட்ட பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - மேலதிக நிதி,**
**இல. 3/19, கின்சி வீதி, கொழும்பு 8, இலங்கை**

தொலைபேசி இல.: +94 112 697 173
தொலைநகல்: +94 112 697 163
மின்னஞ்சல்: pmu@hsep.lk
திகதி: 2024 மார்ச் 05

### இல 6375/MB வழக்கில் பொருந்தும் சிலாபம் மாவட்ட நீதிமன்ற இல. 01/24 இ இன் கீழ் பிஸ்கால் மூலம் நடைபெறும்.

### பெறுமதி வாய்ந்த சொத்து பிரசித்த ஏல விற்பனை

வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்ட சிலாபம் காணி பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட வடக்கு பிட்டிகல் கோறளை ஆணைவிழுந்தான் பற்று, ஆரச்சிகட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு ஆரச்சிகட்டுவ பிரதேசசபை எல்லைக்குள் ராஜகதழுவ எனக் குறிப்பிடப்பட்ட போதும் ஆரச்சிகட்டுவ மேற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஆரச்சிகட்டுவ ராஜகதழுவ என்ற ஊரில் அமைந்துள்ள என்டன்விலாவத்த” என்ற காணிக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட நில அளவையாளர் வர்ணன் பெரேரா அவர்களினால் 7.01.1991 ஆம் ஆண்டு அளவீடு செய்யப்பட்ட இலக்கம் 6551 என்ற நில அளவை படத்தில் 81 ஆம் இலக்க காணிக்கு எல்லைகளாவன.

| | |
| --- | --- |
| வடக்கு | :- இலக்கம் 84 என்ற பகுதியும் |
| கிழக்கு | :- இலக்கம் 82 என்ற பகுதியும் |
| தெற்கு | :- இலக்கம் 80 என்ற பகுதியும் |
| மேற்கு | :- இலக்கம் 181 என்ற பகுதியும் (பாதை) |

ஆகிய எல்லைகளைக்கொண்டு அமைந்துள்ள (ஏக்கர் 00 ரூட் 00 பர்ச்சஸ் 20) விசாலமுடையதும் அதனுள் அமையப்பெற்ற மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் எல்லாம் அமையப்பெற்றனவையாகும்.

மேற்கூறிய காணி கீழ்வருமாறு மீண்டும் மீள் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

ஆரச்சிகட்டுவ ராஜகதழுவ என்ற ஊரில் அமைந்துள்ள “என்டன்விலாவத்த” என்ற காணிக்கு MK.மஞ்சு சிறீ பிரியங்கர அனுமதி பெற்ற நில அளவையாளர் மூலம் 19.09.2013 ஆம் ஆண்டு அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 2576 என்ற வரைபடத்தின் ஒன்றாம் இலக்க காணிக்கு எல்லைகளாவன.

வடக்கு அனுமதிப் பெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் வரைபடத்தில் இல 6551 என்ற காட்டப்பட்டுள்ள 84 ஆம் இலக்க காணியும்,

கிழக்கு அனுமதிப் பெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் வரைபடத்தில் இல.6551 என்ற காட்டப்பட்டுள்ள 82 ஆம் இலக்க காணியும்,

தெற்கு, அனுமதிப் பெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் இல.6551 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 80 ஆம் இலக்க பிரிவும்

மேற்கு அனுமதிப் பெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் இல.6551 என்றவரைபடத்தில் காட்டப்பட்டுள்ள இலக்கம் 181 பிரதேச சபை பாதையும்

ஆகிய எல்லைகளைக் கொண்ட (ஏக்கர் 00 ரூட் 00 பர்ச்சஸ் 20) விசாலமுடையதும் அதனுள் அமையப்பெற்ற மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் எல்லா அமையப்பெற்றனவையாகும்.

**காணியின் அளவு ஏக்கர் 00, ரூட் 00, பர்சஸ் 20**

இது சிலாபம் காணிப்பதிவகத்தில் B23/51 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காணிக்கான பிரவேசம் சிலாபம், புத்தளம், யு3 பிரதான வீதியில் இருந்து கி.மி 14.6 அளவு தூரம் செல்லும் போது சந்திக்கும் ஆரச்சிகட்டுவ நகர புகையிரத வீதிப்பாதை (ஆரச்சிக்கட்டுவ பெற்றோல் நிலைய இடது புறத்தில் உள்ள பாதை) 350 M தூரத்திற்கு செல்லும் போது சந்திக்கும் சனசமூக நிலைய Y சந்தியிலிருந்து இடது பக்கத்திற்கு திரும்பி 50 மீட்டர் அளவில் செல்லும் போது J பக்கமாக சந்திக்கும் (8 இடது விற்பனைக்கான காணி அமைந்துள்ளது.

**பதில் பிஸ்கால் மூலம்**

**05ஆம் திகதி சித்திரை மாதம் 2024 (05.04.2024)**

முற்பகல் 11 மணிக்கு காணி அமையப்பெற்ற இடத்தில் பிரசித்த ஏல விற்பனை நடைபெறும்.

**பணம் செலுத்தும் முறை**

ஏலவிற்பனை முடிவில் விலை தீர்வு செய்யப்பட்டபின் உடனே வெற்றிகரமான கொள்வனவாளரினால் கீழ்வருமாறு பணமாக செலுத்தபடபட வேண்டும்.

1. கொள்வனவு விலையில் 25% (நூற்றுக்கு இருபத்தைந்து )
2. மாகாண அதிகாரிக்கு செலுத்த வேண்டிய 1% (நூற்றுக்கு ஒன்று விற்பனவு வரி
3. பிஸ்கால் தரகுப்பணம் சிவில் சட்டக் கோவை 258 ஆம் பிரிவின்படி தரகுப்பணம்.
4. சகல விதமான பிரச்சார செலவு
5. எழுது வினைஞர் மட்டும் சத்தம் எழுப்புபவர் கொடுப்பனவு ரூபா 500.
6. ஏல விற்பனவு மற்றும் ஏனைய செலவுகள் செய்யப்படின் அதற்கான கொடுப்பனவுகள்.
7. விற்பனவு உறுதிக்கான முத்திரைக் கட்டணம் என்பனவாகும்.

**குறிப்பிட்ட சொத்து விற்பனை நீதிமன்ற அனுமதியின் பேரில் நடைபெறும்.**

கொள்வனவு விலையில் 75% (நூற்றுக்கு எழுபத்தைந்து ) மிகுதி ஏல விற்பனவு நடைபெற்ற தினத்தில் இருந்து முப்பது நாட்களுக்குள் மேற்கூறிய வழக்கு இலக்கத்திற்கு வைப்பில் இட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட 30 நாட்களில் மேல் சொல்லப்பட்ட முழுத் தொகையும் செலுத்தப்படாத விடத்து பணமாக செலுத்தப்பட்ட தொகை திரும்ப மீள்அளிக்கப்படாது என்றும் ஆதனம் மீண்டும் ஏலமிட நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட காணிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் பற்றிய பரிசீலனை, மேலதிக விபரங்கள் பிரதேச முகாமையாளர் மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம். மக்கள் வங்கி கட்டிடம் (முதலாம்மாடி) இல 79, மாரவில் வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி இல :- 032 2253300, 032 2253301, தொலைநகல் (Fax), இல 0322255247.**

**கையொப்பம் தொளிவில்லை**
**பதிவாளர். பதில் பிஸ்கால் மாவட்ட நீதிமன்றம்**
**சிலாபம்.**

**முத்திரை:- பதிவாளர்.**
**மாவட்ட மேஜிஸ்ரெட் நீதிமன்றம்**
**சிலாபம்**

## பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு – வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தினால் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படும் செயற்திட்டத்திற்காக வடமத்திய மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் தகைமையுள்ள, கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| செயற்றிட்டம் | நிதித் தன்மை | மதிப்பிடப்பட்ட வேலை செலவு ரூ. மில்லியன் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா | CIDA பதிவு எல்லை | கேள்விப் பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| மாகாண சுகாதார சேவைத் திணைக்கள நிர்வாக கட்டிடத்தின் மூன்றாம் மாடியில் மற்றும் நான்காம் மாடியில் வேலை முடித்தல். ஆறாம் மாடியில் மற்றும் ஏழாம் (கொங்கிறீட் கூரை) மாடியின் சுவர்களில் பூச்சு சார்ந்த வேலை பூர்த்தி செய்யும் செயற்றிட்டம் | PSSP | 90 | 90 நாட்கள் | 900,000.00 | 15000.00 | C4 அல்லது C3 (கட்டிடத்திற்காக) | 147 நாட்கள் (2024.03.06 முதல் 2024.08.19 வரை) |

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டண தொகை, வட மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு செலுத்திய பின்பு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியை வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள அலுவலகத்தில் 2024.03.05 முதல் 2024.03.25 வரை அலுவலக நாட்களில் முற்பகல் 09.00 முதல் பிற்பகல் 03.00 வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும், கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்திற்கு வருகை தந்து இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொடர்புகள் : 025 - 2050718)

03. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.03.26 முற்பகல் 11.00 இற்கு முன்பு கிடைக்குமாறு, “செயலாளர்/ தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, மாகாண சுகாதார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபைக் கட்டிடத்தொகுதி, ஹரிஸ்சந்ர மாவத்த, அநுராதபுரம்” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

04. சகல கேள்வியுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியில் இருந்து பெற்றுக் கொண்ட அட்டவணையில் குறிப்பிடப்படும் சேவைப் பணிப்பாளர்” பெயரில் பெற்றுக் கொண்ட பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம் உள்ள நிபந்தனையற்ற “வடமத்திய சுகாதார கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்று குறிப்பிட்டு வேறு வேறு இரு உறைகளில் இட்டு, பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. இச் செயற்றிட்டத்துடன் சம்பந்தப்பட்ட கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.03.18 மு.ப.11.00 இற்கு மாகாண சுகாதார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபை நிர்வாக கட்டிடத் தொகுதி, ஹரிஸ்சந்ர மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

07. 2024.03.06 முற்பகல் 11.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதி ஒருவருக்கு, இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

08. இப் பெறுகை சம்பந்தமாக அமைச்சு பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர்/ தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**சுகாதார அமைச்சு,**
**வடமத்திய மாகாணம்,**
**2024.03.05**

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 மார்ச் 5 செவ்வாய்க்கிழமை

## ஐ.சி.சி. விருதுக்கு பத்துமின் பெயர்



சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் (ஐ.சி.சி.) பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீரர் விருதுக்கான பட்டியலில் இலங்கை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க இடம்பெற்றுள்ளார். இந்த குறுகிய பட்டியலில் இந்தியாவின் யஷஸ்வி ஜய்ஸ்வால் மற்றும் நியூசிலாந்தின் கேன் வில்லியம்ஸனும் இடம்பெற்றுள்ளனர்.

பத்தும் நிசங்க பெப்ரவரி மாதம் நடந்த ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இரட்டைச் சதம் பெற்ற இலங்கையின் முதல் வீரராக சாதனை படைத்திருந்தார். அந்தத் தொடரில் அவர் மேலும் ஒரு சதத்தை பெற்று தொடர் நாயகன் விருதை வென்றார். தொடர்ந்து நடந்த டி20 தொடரிலும் அவர் 30 பந்துகளில் 60 ஓட்டங்களை விளாசியமை குறிப்பிடத்தக்கது.

### யூசுப் கிண்ண கால்பந்து தொடர்

## கொழும்பு, சோண்டர்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

பிரின்ஸ் குணசேகர



இளம் கால்பந்து வீரர்களின் திறமையை வெளிக்கொண்டுவரும் நோக்கில் சிட்டி கால்பந்து லீக்கினால் மூன்றாவது முறையாக நடத்தப்படும் 19 வயதுக்கு உட்பட்ட யூசுப் கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் சோண்டர்ஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

சிட்டி லீக் மைதானத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் மாளிகாவத்தை யூத் அணியை கொழும்பு கால்பந்து கழகம் 4–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே அரையிறுதிக்கு முன்னேறியது. இதன்போது கொழும்பு அணிக்காக யூ. ஷகீல் 2 கோல்களை பெற்றதோடு மொஹமட் ஹம்தி மற்றும் மொஹமட் நளீர் தலா ஒரு கோலை பெற்றனர்.

மற்ற காலிறுதிப் போட்டியில் யங் சில்வர் அணியை எதிர்கொண்ட சோண்டர்ஸ் அணி 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. 8ஆவது நிமிடத்தில் டபிள்யூ.வி. நிமாஷ பெற்ற கோல் மூலம் முன்னிலை பெற்ற கொழும்பு அணிக்கு 14 ஆவது நிமிடத்தில் எம். சஹீட் இரண்டாவது கோலை பெற்றுக்கொடுத்தார்.

யங் சில்வர் அணி சார்பில் 18 ஆவது நிமிடத்தில் ஒரே ஒரு கோலை மொஹமட் ஹகீம் பெற்றார். 16 அணிகள் பங்கேற்றுள்ள இந்தத் தொடரில் வெற்றி பெறும் இளம் அணிக்கு 1.5 இலட்சம் ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபா பரிசும் வழங்கப்படவுள்ளது.

## றியல் மெற்றிக்ஸ் சம்பியன்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



ஐகோனிக் யூத்ஸ்–ஸ்ரீ லங்கா அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை றியல் மெற்றிக்ஸ் அணி சம்பியனாக தெரிவானது.

16 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் (03) அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் றியல் மெற்றிக்ஸ் அணி றைசிங் ஸ்டார் அணியை தோற்கடித்தது.

## 2013 சாதாரண தர அணி வெற்றி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்




அனுராதபுரம் ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் 2013 சாதாரண தர அணி 2 ஆவது தடவையாகவும் சம்பியனானது.

26 அணிகள் கலந்து கொண்ட இந்த தொடரின் இறுதிப்போட்டி அனுராதபுரம் ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது. இதில் ஏ.ஐ.எம். பழைய மாணவர் அணியை 2013 சாதாரண தர அணி தோற்கடித்தது.

## சம்பியனானது 2013 அணி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 2013ஆம் ஆண்டு அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (03) நடந்த இறுதிப் போட்டியில் 2007 ஆம் ஆண்டு அணியை எதிர்கொண்ட 2013 அணி 3 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக 2013ஆம் ஆண்டு அணியின் சஹாம் தெரிவு செய்யப்பட்டார்.

# சர்வதேச செய்திகள்



## காசாவில் அவசர போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா அழைப்பு: கெய்ரோவில் இஸ்ரேல் இன்றி பேச்சு

### தொடரும் தாக்குதல்களில் மேலும் 124 பேர் பலி

காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் நீடிக்கும் நிலையில், அதன் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் ரமலான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சியில் அமெரிக்கா உட்பட மத்தியஸ்த நாடுகள் ஈடுபட்டு வரும் சூழலிலேயே அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஐந்து மாதங்களை எட்டும் இந்தப் போரை நிறுத்தும் முன்வொழிவு தொடர்பில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் எகிப்து, அமெரிக்கா மற்றும் கட்டார் மத்தியஸ்தர்கள் அதேபோன்று ஹமாஸ் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் காசாவுக்கு உதவிகளை வழங்குவது மற்றும் பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக பணயக்கைதிகளை விடுவிப்பது ஆகியவை உள்ளடங்கிய பரந்த அளவில் நிபந்தனைகளை இஸ்ரேல் ஏற்றிருப்பதாக அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் காசாவில் இருந்து இஸ்ரேலிய படை முழுமையாக வாபஸ் பெற ஹமாஸ் வலியுறுத்துவது உட்பட சில விடயங்களில் தொடர்ந்து இழுபறி நீடிப்பதாக அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

'போர் நிறுத்தம் ஒன்றை ஹமாஸ் கோருகிறது. எனவே, உடன்படிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது' என்று அலபாமாவில் ஞாயிறன்று (03) இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று பேசிய ஹரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கத்துக்கு மாறான தொனியில் பேசிய அமெரிக்க துணை ஜனாதிபதி, காசாவுக்கு உதவிகளை கணிசமாக அதிகரிக்க இஸ்ரேல் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். காசாவில் மக்கள் பட்டினியில் இருப்பதாகவும் நிலைமை 'மனிதாபிமானமற்ற' வகையில் உள்ளது என்றும் அவர் வர்ணித்தார்.

'காசாவில் பாரிய அளவான வேதனைகள் இடம்பெற்று வரும் நிலையில் அவசர போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட வேண்டும்' என்றார்.

காசா மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்து வடக்கில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவிகளை எடுத்துச் செல்வது தோல்வி அடைந்து வரும் நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழுத்தம் அதிகரித்துள்ளது.

காசாவில் பஞ்சம் ஏற்படும் அச்சுறுத்தல் பற்றி ஐ.நா எச்சரித்திருக்கும் சூழலில் அமெரிக்கா முதல் முறையாக கடந்த சனிக்கிழமை காசாவுக்கு வானில் இருந்து உணவு உதவிகளை போட்டது.

'இக்கட்டான மனிதாபிமான சூழ்நிலையைத் தணிக்க காசாவுக்குள் உதவி விநியோகத்தை விரிவுபடுத்துவது மிகவும் அவசியமாகும்' என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

#### 30,534 பேர் பலி

போர் நிறுத்தம் பற்றி பேச்சுவார்த்தைகள் தீவிரப்படுத்தப்பட்டபோதும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் எந்தத் தணிவும் ஏற்படவில்லை. குறிப்பாக எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் பெரும்பாலான பலஸ்தீன மக்கள் அடைக்கலம் பெற்றுள்ள ரபா நகர் மற்றும் தெற்கின் மிகப்பெரிய நகரான கான் யூனிஸ் மீதான தாக்குதல்கள் உக்கிரம் அடைந்திருந்தன.

ரபாவின் குடியிருப்பு கட்டம் ஒன்றின் மீது நேற்று அதிகாலை இடம்பெற்ற வான் தாக்குதலில் குறைந்தது அறு பேர் கொல்லப்பட்டனர். இதில் மாதி



குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீதே தாக்குதல் இடம்பெற்றிருப்பதோடு இதில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

முன்னதாக ரபா நகரில் உள்ள கிர்பத் அல் அதாஸ் பகுதியில் உள்ள வீட்டின் மீது கடந்த ஞாயிறு இரவு இடம்பெற்ற வான் தாக்குதல்களில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாயின் கதறலுக்கு மத்தியில் நயீட் மற்றும் விசாம் அபூ அன்ஸா என்ற இரட்டை குழந்தைகள் நேற்று முன்தினம் ரபாவில் அடக்கம் செய்யப்பட்டன. பொதுமக்கள் மாத்திரம் இருந்த வீட்டின் மீதே குண்டு வீசப்பட்டதாக உறவினர் ஒருவர் கூறினார். இந்தத் தாக்குதலில் ஒரே குடும்பத்தின் 14 பேர் கொல்லப்பட்டனர்.

'அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தபோது திடீரென்று ஏவுகணை ஒன்று தாக்கியது. முழு வீடும் தரைமட்டமாக்கப்பட்டது' என்று அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற 13 'படுகொலை' சம்பவங்களில் குறைந்தது 124 பேர் கொல்லப்பட்டு மேலும் 210 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30,534 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 71,920 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 70 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

#### உதவி லொறி மீது தாக்குதல்

காசாவில் உணவு பற்றாக்குறை மோசமடைந்திருக்கும் நிலையில் விலங்குணவுகள் மற்றும் தாவரங்களை அறைத்து சாப்பிடுவதாக பலஸ்தீன குடும்பங்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளன. இதேநேரம் உதவிகள் செல்லாத வடக்கு காசாவில் அண்மைய நாட்களில் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குறைந்தது 16 குழந்தைகள் உயிரிழந்து இருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மத்திய காசாவின் டெயிர் அல் பலாவில் உதவி லொறி ஒன்றின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் பலரும் கொல்லப்பட்டதாக பார்த்த ஒருவர் ஏ.எப்.பிக்கு தெரிவித்துள்ளார்.

'அங்கிருந்து ஓட்டம் பிடிப்பதா இல்லை லொறியில் இருந்தவர்களை காப்பாற்றுவதா என்று எமக்குத் தெரியாதிருந்தது. அப்போது அவர்கள் இரண்டாவது ஏவுகணையை வீசினார்கள்' என்று சம்பவத்தை பார்த்த ரியாத் அல் குராம் கூறினார்.

இது தொடர்பில் இஸ்ரேல் இராணுவத்தை ஏ.எப்.பி. தொடர்பு கொண்டபோது, அது 'உதவி லொறியல்ல' என்று மறுத்தபோதும் அது தொடர்பில் விளக்கம் அளிக்க தவறியது.

ஏற்கனவே கடந்த வியாழக்கிழமை உதவி பெறுவதற்காக ஒன்று திரண்ட மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சர்வதேச அளவில் கண்டனங்கள் வெளியாகி இருந்தன.

காசாவுக்கு உதவி வாகனங்கள் செல்வதை இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வருகிறது. குறிப்பாக வடக்கு காசாவுக்கு உதவிகள் அனுமதிக்கப்படாத நிலை காணப்படுகிறது. தெற்கிற்கு செல்லும் உதவிகள் போதுமானதாக இல்லை.

இதில் 65 சதுர கிலோமீற்றர் அளவே ஆன ரபாவில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமாக 1.3 மில்லியன் மக்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். காசாவில் இடம்பெயர்ந்தவர்களுக்கான கடைசி அடைக்கலாம் இந்த நகர் உள்ளது.

#### பேச்சில் முன்னேற்றம்

காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளில் தொடர்ந்தும் உயிருடன் இருப்பவர்களின் பட்டியலை வெளிடும்படி விடுத்த கோரிக்கையை ஹமாஸ் அமைப்பு நிராகரித்ததை அடுத்து கெய்ரோவில் இடம்பெற்று வரும் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தையை இஸ்ரேல் புறக்கணித்ததாக இஸ்ரேலிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் இஸ்ரேல் தொடர்ந்து குண்டு வீசுவதால் அந்த விபரத்தை தர முடியாதிருப்பதாக ஹமாஸ் அமைப்பு கூறியதாக பி.பி.சி. தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

'யார் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வது நடைமுறை சாத்தியம் இல்லை' என்று மூத்த ஹமாஸ் அதிகாரி ஒருவரான டொக்டர் பசம் நயிம் குறிப்பிட்டார்.

இந்நிலையில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் ஹமாஸ் தூதுக் குழு மற்றும் மத்தியஸ்தர்கள் இடையே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக கெய்ரோ பேச்சுவார்த்தை தொடர்பில் எகிப்து அரச தொலைக்காட்சி நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

எதிர்வரும் மார்ச் 10 அல்லது 11 ஆம் திகதி ஆரம்பமாகும் முஸ்லிம்களின் புனித ரமலான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை அடையும் முயற்சியில் எகிப்து தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று எகிப்து உளவுச் சேவையின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'அல் கஹெரா நியூஸ்' தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

'பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரேலிய பிரதிநிதிகள் இன்றியே கெய்ரோவில் இரண்டாவது நாளாக நேற்று (04) பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹெய்ட்டியில் 4000 கைதிகள் தப்பியோட்டம்



ஹெய்ட்டியின் இரு பிரதான சிறைச்சாலைகள் மீது குற்ற கும்பல்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 4,000 கைதிகள் தப்பிச் சென்றதை அடுத்து அந்நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 72 மணி நேர அவசர நிலை அறிவிக்கப்பட்டிருப்பதோடு ஊரடங்குச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது வெளிநாட்டில் இருக்கும் பிரதமர் ஏரியல் ஹென்ரியை பதவி விலகும்படி குற்ற கும்பல் தலைவர்கள் கோரியுள்ளனர். பிரதமரை வெளியேற்ற முயற்சிக்கும் இந்தக் குழுக்கள் தலைநகர் போர்ட் அவு பிரின்ஸின் 80 வீதமான பகுதியை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. நைரோபி சென்றிருக்கும் பிரதமர் கென்யா தலைமையிலான பன்னாட்டு பாதுகாப்பு படை ஒன்றை ஹெய்ட்டிக்கு வரழைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் நிலையிலேயே இந்தப் பதற்றம் வெடித்துள்ளது.

ஹெய்ட்டியில் குற்ற கும்பல்களின் வன்முறைகளில் கடந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

## புர்கினா கிராமங்கள் மீது தாக்குதல்: 170 பேர் பலி



புர்கினா பாசோவின் மூன்று கிராமங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட சுமார் 170 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொம்சில்கா, நோர்டின் மற்றும் சோரோ ஆகிய கிராமங்கள் மீது தாக்குதல்களை நடத்தியவர்களை கண்டறிய உதவும்படி சம்பவத்தை பார்த்தவர்களுக்கு அரச வழக்கறிஞர் அலி பெஞ்சமின் அழைப்பு விடுத்துள்ளார்.

மறுபுறம் நகர மையங்கள் உட்பட இஸ்லாமியவாத ஆயுதக் குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக இராணுவம் எச்சரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியை கைப்பற்றியபோதும் புர்கினாவின் மூன்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட பகுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்நிலையில் கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி யடென்கா மாகாணத்தில் உள்ள கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை ஒன்றை ஆரம்பித்திருப்பதாக பெஞ்சமின் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்தாரிகள் மேலும் பலருக்கு காயத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி இருப்பதாக அரச வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.